Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, APRIL 27, 2022

புதன்கிழமை ஏப்ரல் 27, 2022 | ஒளி: 07 கதிர்: 290 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

# லிட்ரோ விலை ரூ.4,860




எரிவாயு சிலிண்டர்களின் விலை அதிகரிக்கப்படாவிடின் எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு எரிவாயு விநியோகம் செய்ய முடியாது என்று தெரிவித்த லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத், பாரிய நட்டத்தின் மத்தியிலேயே சிலிண்டர்கள் விற்பனை செய்யப்படுவதாக தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



“ போராட்டங்களின் பின்னணியில் எதிர்க்கட்சிகள், அரசாங்கத்துக்கு எதிரான அமைப்புகள், புலம் பெயர் தமிழர்கள், தீவிரவாத சக்திகள், வெளிநாட்டு சக்திகள் என்பன இருக்கின்றன

“ மஹிந்த ராஜபக்‌ஷவின் படங்களைக் காண்பித்து மக்களிடம் வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றத்துக்கு சென்றவர்கள், தற்போது பிரதமருக்கு எதிராக, சுயாதீனமாகச் செயற்படுவது ஒழுக்கக்கேடானது

‘யார் சொன்னாலும் போக மாட்டேன்

# “முடிந்தால் அனுப்புங்கள்”

“யாருக்காவது என்னை அனுப்ப முடியுமானால் அனுப்புங்கள்” என்று தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, தான் விரைவில் பதவி விலகப் போவதில்லை என்பதை வலியுறுத்தியுள்ளார். தன்னைப் பதவி விலகுமாறு ஒவ்வொருவராகக் கூறினாலும் இராஜினாமா செய்வதற்கு தான் தயாரில்லை எனவும் எதிர்க்கட்சி பெரும்பான்மையைக் காட்டினால் மாத்திரமே பதவி விலகத் தயார் எனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



“ மக்கள் ஆணை எமக்கு வழங்கப்படாது ஒருபோதும் எம்மால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க முடியாது. மக்கள் ஆணை இல்லாது ஒருபோதும் என்னால் இடைக்கால அரசாங்கத்தில் அங்கம் வகிக்க முடியாது

“ 69 இலட்சம் மக்களின் ஆணையில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கே அரசாங்கத்தை கொண்டு நடத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நாங்கள் எதிர்க்கட்சியினர். எமக்கிருக்கும் அதிகாரத்தை எதிர்க்கட்சியில் இருந்தே பயன்படுத்த முடியும்

நாடகத்தில் அங்கம் வகிக்கமாட்டேன்

# “ஆணையுடன் அமருவேன்”

இடைக்கால அரசாங்கத்தை அமைத்து, அடுத்ததாக அரங்கேற்றும் நாடகத்தில் அங்கம் வகிப்பதை விடவும் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவது ஆரோக்கியமானது எனவும், மக்கள் ஆணை இல்லாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாம் அரசாங்கத்தில் இணைய மாட்டோம் எனவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# மக்களின் போராட்டம் அராஜகமானது

## முட்கம்பிகளைக் கொண்ட வீதித் தடைகள் நாட்டை பாதுகாப்பதற்கே என்கிறது அரசாங்கம்

பா.நிரோஸ்

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை பதவிவிலகக்கோரி ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக, மக்கள் போராடுவது அராஜகமான செயற்பாடு எனவும், மக்கள் இவ்வாறு செயற்பட்டால் நாட்டை ஆட்சி செய்வது யார்? நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கப்போவது யார் எனவும் கேள்வி எழுவதாகவும், முட்கம்பிகளைக் கொண்ட வீதித் தடைகள், பொதுமக்களைக் காயப்படுத்துவதற்காக அல்ல; மாறாக, நாட்டை பாதுகாப்பதற்கே எனவும் அமைச்சரவைப் பேச்சாளர்களான நாலக கொடஹேவா, ரமேஷ் பத்திரண ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



ஐ.ம..சவின் ஐக்கிய சக்தி பாத யாத்திரையில் பிடிக்கப்பட்ட படங்கள்

# கடனை செலுத்துவதற்கு மற்றொரு கடன்; சீனா இலங்கைக்கு யோசனை

பா.நிரோஸ்

இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள கடனை மறுசீரமைக்க முடியாதென சீனா அறிவித்துள்ளது. சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனை செலுத்துவதற்காக மற்றொரு கடனை இலங்கைக்கு வழங்க சீனா யோசனை முன்வைத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

# 21ஆவது திருத்தச் சட்டமூலம்; மஹிந்தவின் யோசனைக்கு அங்கிகாரம்

பா.நிரோஸ்

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச்சட்ட மூலத்தை தயாரிப்பதற்கான பிரதமரின் யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு நேற்று (26) உரையாற்றிய அவர், நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல்,

தொடர்ச்சி P2

நம்பிக்கையில்லா பிரேரணை தாமதம்

# எதிர்க்கட்சிக்கு பசிலுடன் டீல்

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதில் ஏற்பட்டுள்ள தாமதம், எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான ஒப்பந்தமாக இருக்கலாம் என்று குற்றஞ்சாட்டிய முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார,

தொடர்ச்சி P2

# சதிகளால் அதிகாரத்தை தக்கவைக்க முயற்சி

## கோட்டா ஜனாதிபதி ஆசனத்தில் இருக்கும்வரை ஆதரவில்லை



கோட்டாபய ராஜபக்‌ஷவை ஜனாதிபதி ஆசனத்தில் வைத்துக்கொண்டு முன்வைக்கும் இடைக்கால அரசாங்கத்திற்கு எமது ஒத்துழைப்புகளை ஒருபோதும் வழங்கப்போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

புதிய பிரேரணையைக் கொண்டுவர

# அமெரிக்கா ஆராய்கின்றது

இலங்கையின் நடைமுறை பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்து வருகின்றோம் என்பதற்காக, தமிழ் மக்களின் பிரச்சினைகளை மறந்துவிட்டோம் என அர்த்தப்படாது. ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் அடுத்த மார்ச் கூட்டத்தொடருக்கு முன்னர் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணை ஒன்றினை கொண்டுவருவது குறித்து அமெரிக்கா ஆராய்ந்து வருவதாகவும்,

தொடர்ச்சி P2



# கோட்டாவின் வாக்குறுதிகள் மீது நம்பிக்கையில்லை

## வடக்கின் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் அமெரிக்க தூதுவரிடத்தில் தெரிவிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் வாக்குறுதிகள் மீது நம்பிக்கையில்லை எனவும், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கத்தால் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் எனத் தாம் நம்பவில்லை எனவும் வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் அமெரிக்க தூதுவரிடத்தில் தெரிவித்துள்ளனர். வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசியல் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன்போதே இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், டெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# சகல கட்சிகளையும் உள்வாங்கிய அமைச்சரவை அவசியம்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

அரசியல் கட்சிகளின் மாறுபட்ட கொள்கைகளுக்கு மதிப்பளிக்கும் அதே வேளையில், பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் கூடிய அமைச்சரவையை அமைத்து, பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க ஆலோசனைச் செயற்பாட்டில் இணைந்து செயற்பட வேண்டிய நேரம் வந்துள்ளதென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2






சாய்ந்தமருது தற்கொலை தாக்குதல்

# சாராவை இனங்காண டீஎன்ஏ பரிசோதனை

## உடற்பாகங்களை தோண்ட நீதிமன்றம் அனுமதி

2019 ஈஸ்டர் தின தாக்குதலுக்கு பின்னர், சாய்ந்தமருதில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உடற்பாகங்களை அம்பாறை பொது மயானத்திலிருந்து இன்று (27) எடுத்து டீஎன்ஏ பரிசோதனை மேற்கொள்வதற்கு கல்முனை நீதவான் நீதிமன்றம், நேற்று (26) அனுமதி வழங்கியது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “முடிந்தால் அனுப்புங்கள்”

ஆளுங்கட்சியின் அமைச்சர்கள் மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற முன்னாள் பிரதிநிதிகளுடன் அலரி மாளிகையில் நேற்று (26) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்துள்ளாார்.

இந்நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்துக்கு எதிரானப் போராட்டத்தில் புலம் பெயர் தமிழர்கள், வெளிநாடு சக்திகள், தீவிரவாத சக்திகள் இருப்பதாக தெரிவித்துள்ள ஆளுங்கட்சியின் மாகாணசபை சங்கத்தினர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், அரசாங்கமும் ஒருபோதும் பதவி விலகக்கூடாதென வலியுறுத்தினர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அரசாங்கத்தின் அமைச்சர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களுக்கும் இடையில் அலரிமாளிகை நேற்று (26) நடைபெற்ற கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

மேலும் இத்தீர்மானத்தை ஜனாதிபதிக்கு அறிவிக்கவும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளதோடு, நாட்டில் ஏற்பட்டுள்ளப் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு பிரதமர் பதவியில் மஹிந்த ராஜபக்ஷ தொடர வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தியுள்ளனர்.

பிரதம் மஹிந்த ராஜபக்ஷவின் படங்களைக் காண்பித்து மக்களிடம் வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றத்துக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், தற்போது பிரதமருக்கு எதிராகவே சுயாதீனமாகச் செயற்படுவது ஒழுக்கக்கேடானது எனவும் தெரிவித்துள்ளனர்.

69 இலட்ச பெரும்பான்மை மக்கள் தற்போது பிரதமருக்கு ஆதரவாக இருக்கிறார்கள். எனினும் அவர்களின் மௌனம் காரணமாக சிறிய குழுவினரின் போராட்டத்துக்கு ஊடகங்களினதும், சமூக ஊடகங்களினதும் விளம்பரங்கள் கிடைத்தமையால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ளப் போராட்டங்களுக்கு எதிர்க்கட்சிகளினதும், அரசாங்கத்துக்கு எதிரான அமைப்புக்களினதும் தூண்டுதல்களே காரணம். இப்போராட்டத்தில் புலம் பெயர் தமிழர்கள், தீவிரவாத சக்திகள், வெளிநாட்டு சக்திகள் இருப்பதாகவும் பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தை நிறைவு செய்த மஹிந்த ராஜபக்ஷ இல்லாதிருந்தால் இவ்வாறான போராட்டங்களை மேற்கொள்வதற்கான சூழல் நாட்டில் ஏற்பட்டிருக்காது எனவும் மாகாணசபை சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

# எதிர்க்கட்சிக்கு பசிலுடன் டீல்

பசில் ராஜபக்ஷவுடன் ஐக்கிய மக்கள் சக்தி ஒப்பந்தம் செய்துள்ளதா? என நாங்கள் சந்தேகிக்கிறோம் என்று தெரிவித்தார்.

நேற்று (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தர்.

ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணையை கையளிப்பதற்குத் தயாராகி பல வாரங்கள் கடந்துவிட்டதாகவும், இப்போது அதைச் செய்வதற்கான உற்சாகம் அவர்களிடம் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

பெரும்பான்மை மக்களின் கோரிக்கையின்படி அரசாங்கத்தை வெளியேற்றி சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதில் தாமதம் ஏற்பட்டதன் பின்னணியில், சில இரகசியத்தன்மை இருப்பதாக தான் உணர்வதாகவும் குறிப்பிட்டார்.

சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதில் ஐக்கிய மக்கள் சக்தி எந்த ஆர்வத்தையும் கொண்டிருக்கவில்லை என தெரிவித்த அவர், சஜித் பிரேமதாச தற்போது அதற்கு எதிராக பேசுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

# கடனை செலுத்துவதற்கு மற்றொரு கடன் சீனா இலங்கைக்கு யோசனை

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், வெளிநாட்டுக் கையிருப்புப் பிரச்சினைகளால் பெற்றுக்கொண்டு கடனை மீள செலுத்த முடியாத நிலைக் காணப்படுவதால், கடனை மறுசீரமைக்க வேண்டுமென இலங்கைக்கு கடன் வழங்கியவர்களிடம் அரசாங்கம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கு கடனை வழங்கியுள்ள ஏனைய நாடுகள் இதற்கு சாதகமான பதிலை வழங்கியிருந்தாலும், சீனா இந்த விடயத்தில் வேறொரு நிலைப்பாட்டிலேயே இருப்பதாகவும் தெரிவித்தார்.

சீனா உலகில் பல நாடுகளுக்கு கடன் வழங்கியுள்ளது. இலங்கைக்கு வழங்கப்பட்ட கடனை மறுசீரமைப்பு செய்தால் ஏனைய நாடுகளும் கடன் மறுசீரமைப்புக் கோரிக் கையை சீனாவிடம் முன்வைக்கும் என்பதால், பெற்றுக்கொண்ட கடனை செலுத்துவதற்கு மற்றொரு கடனை வழங்குவதாக சீனா யோசனை முன்வைத்துள்ளது என்றார்.

இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் அலி சப்ரி இது தொடர்பில் விரைவில் பாராளுமன்றத்தில் விளக்கமளிப்பார். இலங்கைக்கு அவசரமாக 4 அல்லது 5 பில்லியன் டொலர்கள் தேவைப்படுகிறது. இதனால் கடன் மறுசீரமைப்பு அவசியம். இது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திடம் கலந்துரையாடியுள்ளோம். இலங்கைக்கு உதவுவதாக அவர்கள் அறிவித்துள்ளார்கள். இது இலங்கைக்கு பெரும் பலமாக அமையும் எனவும் தெரிவித்தார்.

# சாராவை இனங்காண டீஎன்ஏ பரிசோதனை

புதைக்கப்பட்ட சடலங்களில், சாரா ஜெஸ்மின் என்றழைக்கப்படும் புலஸ்தினி மகேந்திரனின் சடலமும் உள்ளதா என்பதை பரிசோதனை மூலம் உறுதிப்படுத்துவதற்காகவே உடற்பாகங்கள் தோண்டி எடுக்கப்படவுள்ளன.

அம்பாறை நீதவான் உள்ளிட்ட விசாரணை அதிகாரிகள் மற்றும் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்கள அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று சஹ்ரான் ஹாஷிமின் தலைமையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் உட்பட பல இடங்களில் தற்கொலை குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதியன்று சஹ்ரானின் சகோதரரான மொஹமட் ரில்வான், சாய்ந்தமருது பகுதியில் தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்தியதில், சிறுவர்கள் உள்ளிட்ட 17 பேர் உயிரிழந்தனர்.

எனினும், கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியன் தேவாலயத்தில் தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்தி உயிரிழந்த மொஹமது ஹஸ்தூன் என்பவரின் மனைவியான சாரா ஜெஸ்மின் என்றழைக்கப்படும் புலஸ்தினி மகேந்திரனின் உடற்பாகங்கள் அங்கு காணப்பட்டமை தொடர்பில், டீஎன்ஏ பரிசோதனையில் உறுதி செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால், சாய்ந்தமருது வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உடற்பாகங்களை மீண்டும் தோண்டி எடுத்து பரிசோதனை செய்ய தீர்மானிக்கப்பட்டு, அதற்கான அனுமதி கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் கோரப்பட்டதற்கு அமையவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

> **“ சாய்ந்தமருது வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உடற்பாகங்களை மீண்டும் தோண்டி எடுத்து பரிசோதனை செய்ய தீர்மானிக்கப்பட்டு, அதற்கான அனுமதி கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் கோரப்பட்டதற்கு அமையவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது**

# லிட்ரோ விலை ரூ.4,860

எரிவாயு நெருக்கடி தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கு நேற்று (26) ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

பிற்பகல்வேளையில் அவ்வாறு அவர் கூறியிருந்தாலும் 12.5 கிலோ கிராம் நிறையைக் கொண்ட லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை, 4,860 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 5 கிலோ கிராம் சிலிண்டர் 1,945 ரூபாயாகவும், 2.3 கிலேகிராம் சிலிண்டர் 910 ரூபாயாகவும், அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தமது நிறுவனத்தக்கு, பல வங்கிகளில் 10 பில்லியன் ரூபாய்கும் அதிகமான கடன் இருப்பதால் விலையை அதிகரிப்பதை தவிர வேறு வழியில்லை என்றும் 14 பில்லியன் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளதாகவும், விலை திருத்தப்படாவிட்டால் எதிர்காலத்தில் எரிவாயு இறக்குமதியை மேற்கொள்ள முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

நிலவும் நெருக்கடிகளுக்கு மத்தியில் நிறுவனம் பொதுமக்களின் அவலத்தை உணர்ந்துள்ளதாகத் தெரிவித்த அவர், தற்போதைய விலைக்கு அரசாங்கத்தால் பெருமளவில் மானியமாக வழங்கப்படுவதாகவும் மேலும மானியங்களை வழங்கும் திறன் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் குறிப்பிட்டார்.

# “ஆணையுடன் அமருவேன்”

அடக்குமுறை அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஐக்கிய சக்தி பாதயாத்திரை நேற்று (26) கண்டியில் ஆரம்பமானது. எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்த பேரணியின் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

69 இலட்சம் மக்களின் ஆணையில் ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கே அரசாங்கத்தை கொண்டு நடத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நாங்கள் எதிர்க்கட்சியினர் . எமக்கிருக்கும் அதிகாரத்தை எதிர்க்கட்சியில் இருந்தே பயன்படுத்த முடியும். ஆட்சியை அமைக்கும் மக்கள் ஆணை எமக்கு வழங்கப்படாது ஒருபோதும் எம்மால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க முடியாது. ஒருவருக்கு பதிலாக இன்னொருவரை நாட்காலியில் அமர்த்த இதுவொன்றும் சங்கீத நாட்களை அல்ல. மக்கள் ஆணை இல்லாது ஒருபோதும் என்னால் இடைக்கால அரசாங்கத்தால் அங்கம் வகிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

# சதிகளினால் அதிகாரத்தை தக்கவைக்க முயற்சி

ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான இந்த அரசாங்கம் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டு அதிகாரத்தை தம் கையில் தக்க வைத்துக் கொள்ள தொடர்ச்சியாக முயற்சித்து வருகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பில் நேற்று (26) கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் இன்று அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி என பாரிய இரண்டு நெருக்கடிகள் காணப்படுகின்றன. இவ்விரு நெருக்கடிகளில் இருந்தும் நாட்டை மீட்டு ஸ்திரமான நிலைக்கு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதாக தெரியவில்லை. நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி குறித்து நாமும் இந்நாட்டு பொருளாதார நிபுணர்களும் அரசியல் இயக்கமாக இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்தே உண்மைகளை முன்வைத்தோம். நீண்டகாலமாக பின்பற்றப்பட்டு வந்த தவறான கொள்கைகள் தீவிரமடைந்து ஒட்டுமொத்த சமூகத்தின் மீதும் ஏற்படும் பாதிப்புகள் குறித்து நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் ஜனாதிபதி, நிதியமைச்சர், மத்திய வங்கி ஆளுநர் மற்றும் அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்தாது தமது தீர்மானங்களை அமுல்படுத்தி நெருக்கடியை அதிகரிக்க அனுமதித்தனர். அதற்கான விளைவுகளை இன்று நம் நாட்டின் பொதுமக்கள் எதிர்கொண்டு கொண்டிருக்கிறார்கள்.

# மக்களின் போராட்டம் அராஜகமானது

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய (26) வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் மக்களின் ஜனநாயக போராட்டம் குறித்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முட்கம்பிகளைக் கொண்ட வீதித்தடைகள், பொதுமக்களைக் காயப்படுத்துவதற்காக அல்ல நாட்டைப் பாதுகாப்பதற்கே பொலிஸார் இவ்வாறு செயற்படுகின்றனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்குவந்ததுமே போராடுவதற்கான இடமொ ன்றை ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னாள் ஒதுக்கிதந்திருந்தார்.

எனினும் போராட்டங்கள் சில நேரங்களில் வன்முறைகளாக மாறுகின்றன. இதனைத் தடுப்பதற்காகப் பொலிஸார் பல வழிமுறைகளைப் பின்பற்றுகிறார்கள். இது பொது மக்களைக் காயப்படுத்துவதற்காக அல்ல, நாட்டைப் பாதுகாப்பதற்காக பொலிஸார் எடுக்கும் முயற்சிகள் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக மக்கள் போராடிவருவதாவது அராஜகமான செயற்பாடாகவே கருதுகின்றோம். மக்கள் இவ்வாறு செயற்பட்டால் நாட்டை ஆட்சி செய்வது யார்? நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கப்போவது யார்? என்ற கேள்வி எழுகிறது என்றார்.

# கோட்டாவின் வாக்குறுதிகள் மீது நம்பிக்கையில்லை

காணாமல் போனோர் விடயத்தில் அவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடுகளையும், மரண சான்றிதழ்களையும் வழங்குவது மட்டுமே தீர்வு அல்ல. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் நிலைப்பாடாக உள்ளது. இராணுவத்தில் ஒப்படைக்கப்பட்ட பொதுமக்களுக்கு என்ன நடந்தது? யுத்தத்தில் உயிரிழந்தனர் என்பது வேறு காணாமல் ஆக்கப்பட்டனர் என்பது வேறு,ஆகவே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை முதலில் தெரியப்படுத்த வேண்டும் என தமிழ் அரசியல் தரப்பினர் அமெரிக்க தூதுவரிடத்தில் தெரிவித்துள்ளனர்.

அதேபோல் வடக்கில் காணி அபகரிப்பு செயற்பாடுகள் தொடர்ச்கியாக இடம்பெற்று வருவதாகவும், பல்வேறு சந்தர்ப்பங்களில் இது குறித்து உரிய தரப்புடன் கலந்துரையாடிய போதிலும் இதற்கான தீர்வு இன்னமும் கிடைக்கவில்லை எனவும் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

காணி விடுவிப்பு தொடர்பில் இறுதியாக ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது கலந்துரையாடப்பட்ட போதிலும் அதில் எந்தவித பலனும் கிடைக்கவில்லை, உண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வாக்குறுதிகள் மீது நம்பிக்கையில்லை எனவும், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கத்தின் கீழ் தீர்வுகள் கிடைக்கும் எனவும் தாம் நம்பவில்லை எனவும் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

## 21ஆவது திருத்தச் சட்டமூலம்; மஹிந்தவின் யோசனைக்கு அங்கிகாரம்

பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு அவற்றுக்கு தீர்வை பெற்றுத்தரும் நோக்கில் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளப்பட வேண்டுமென பலரும் கோரிவந்தனர். இதனடிப்படையில், அரசியலமைப்பு திருத்த யோசனையை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார் என்றார்.

இதன்படி அரசியலமைப்பின் 19ஆவது, 20ஆவது திருத்தங்களில் உள்ள சாதகமான விடயங்களை அடிப்படையாகக்கொண்டு 21ஆவது திருத்தச்சட்ட மூலத்தை தயாரிப்பதற்கான பிரதமரின் யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இந்த 21ஆவது திருத்தச் சட்டமூலத்தை விரைவாக தயாரிப்பதற்கு சட்ட வரைஞருக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கு அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிப்பதற்கும், தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு திருத்த யோசனைகள் தொடர்பாக கலந்துரையாடி பொது இணக்கப்பாட்டுடன் சட்டமூலமொன்றை தயாரிப்பதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிப்பதற்கான பிரேரணையொன்றை பிரதமர் சமர்ப்பிக்கவும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டு மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்து ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தி பாராளுமன்றத்துக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் நோக்கில் 21ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்படும் எனவும் அமைச்சர் ரமேஸ் பத்திரன தெரிவித்தார்.

# அமெரிக்கா ஆராய்கின்றது

அது குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றுக்கொண்டுள்ளதாகவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், வடக்கு தமிழ் அரசியல் பிரதிநிதிகளிடத்தில் தெரிவித்துள்ளார்.

வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசியல் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இந்த சந்திப்பில் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், டெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது வடக்கின் அரசியல் நிலைமைகள், பொருளாதார மற்றும் பொதுமக்கள் பிரச்சினைகள் குறித்தும் தூதுவர் அதிக கவனம் செலுத்தியுள்ளார்.

எனினும் இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அடுத்தகட்ட நகர்வுகள், மற்றும் அமெரிக்காவின் ஒத்துழைப்புகள் குறித்தும் தமிழர் அரசியல் தரப்பினர் வினவியுள்ளனர். இது குறித்து கருத்துக்களை முன்வைத்திருந்த அமெரிக்க தூதுவர்,

தற்போது ஜெனிவாவில் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணையின் நகர்வுகள் குறித்தும், இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்தும் கண்காணித்துக்கொண்டே உள்ளோம். அதேபோல் இலங்கையில் இடம்பெற்றுக்கொண்டுள்ள சம்பவங்கள் குறித்தும் அவதானித்து வருகின்றோம். தற்போது இலங்கையில் பாரிய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலையொன்று காணப்படுகின்றது.

# அந்த எண்ணிக்கை இரகசியமானது



தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மையை இழந்துள்ளதாக தெரிவிக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமது அணிக்கு பெரும்பான்மை இருப்பதாகவும், எத்தனை பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்பது இரகசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவரது பதவியிலிருந்து விலக வேண்டும். மேலும் நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வைக் காணும் வகையில் இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமென ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானம் எடுத்துள்ளது என்றார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகும்பட்சத்தில் புதிய பிரதமராக யாரை தெரிவு செய்வது என்பது தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது. எவ்வாறாயினும் புதிய பிரதமரை பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகளுடன் கலந்துரையாடியே தெரிவு செய்யப்பட வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மையை இழந்துள்ளது. எமக்கு பெரும்பான்மை இருக்கிறது. எனினும், எத்தனை பாராளுமன்ற உறுப்பினர்கள் எமக்கு ஆதரவாக இருப்பார்கள் என்பது இரகசியமானது எனவும் தெரிவித்தார்.

பதவி விலகவில்லை என்றால்

## மஹிந்தவை மக்கள் குப்பைத் தொட்டியில் வீசுவார்கள்

தனது குடும்பத்துக்காக அதிகாரத்தைப் பிடித்துக்கொண்டிருக்காது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உடனடியாகப் பதவி விலக வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருந்ததாலேயே நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படத்தக்கூடிய அத்தனை தீர்மானங்களையும் எடுத்து நாட்டையும், நாட்டு மக்களையும் அரசாங்கம் அதல பாதாளத்துக்குள் தள்ளியுள்ளது.

ராஜபக்ஷர்களின் இவ்வாறான தீர்மானங்களாலேயே அவர்களுக்கு வாக்களித்த, வாக்களிக்காத மக்கள் அனைவரும் ஒன்றுகூடி ராஜபக்ஷர்கள் வீட்டுக்கு செல்ல வேண்டுமென கூறிவருகிறார்கள். அரசாங்கம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை இழந்துள்ளது.

ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டும். இல்லை என்றால் மஹிந்தவை, மக்கள் குப்பைத் தொட்டியில் வீசியெறிவார்கள். ஜனாதிபதி பதவி விலக வேண்டும். அதேபோல பெரும்பான்மை இழக்கப்பட்டுள்ளதால் பிரதமர் மஹிந்தவும் பதவியை துறக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



பொருளாதார நெருக்கடிகளுக்கு

## தற்போதைய அரசாங்கமும் பொறுப்புக்கூற வேண்டும்

பா.நிரோஸ்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு, தற்போதைய அரசாங்கமும் பொறுப்புக்கூற வேண்டுமென அமைச்சரவை பேச்சாளர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளன. எனினும் நாட்டிலுள்ள சாதாரண மக்களின் நாளாந்த சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. எனவே, அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பை அரசாங்கம் கட்டுப்படுத்துமா அல்லது நாட்டு மக்களை பட்டினியில் சாகவிடுமா என்று இதன்போது வினவப்பட்டது.

கொரோனா வைரஸ் காரணமாக, உலகளவில் விநியோகச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன. இதனால் உலக சந்தையில் எரிபொருள், உரம் உள்ளிட்ட பொருட்களின் விலைகள் இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன் பாதிப்புக்கு நாட்டு மக்கள் முகங்கொடுத்து வருகிறார்கள். இதனால் மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க நிதி அமைச்சர் அலி சப்ரி, எமக்கு உதவும் நாடுகளுடன் கலந்துரையாடி வருகிறார்.

இன்னும் ஒருசில மாதங்களுக்குள் நாட்டு மக்களுக்கு விசேட நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. இதேவேளை, எல்லாப் பக்கங்களிலும் தவறுகள் நடந்துள்ளன. நாட்டின் தற்போதைய பிரச்சினை, கடந்த பல வருடங்களாக நாட்டை ஆட்சி செய்துவரும் அரசாங்கங்களால் உருவாக்கப்பட்டதாகும். தற்போதைய அரசாங்கம் உள்ளிட்ட கடந்த இரண்டு அரசாங்கங்களும் தற்போதைய நிலைமைகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என அமைச்சர் நாலக கொட தெரிவித்தார்.



## கோழி இறைச்சியின் விலை 1,500ஆக அதிகரிக்கும்

கால்நடைகளுக்கான உணவுப் பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளதால் ஜூன் மாதத்தில் கோழி இறைச்சி கிலோ கிராம் ஒன்றின் விலை 1,500 ரூபாயாகவும், கோழி முட்டை ஒன்றின் விலை 45 ரூபாயாகவும் அதிகரிக்குமென தேசிய கால்நடை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் மஞ்சுளா சுமித் தெரிவித்துள்ளார்.

கால்நடைகளுக்கான உணவுகள், ஏனைய செலவுகள் அதிகரித்துள்ளதால் சிறிய, நடுத்தர கால்நடை உற்பத்தியாளர்கள் தங்களது வர்த்தக செயற்பாடுகளில் இருந்து விலகியுள்ளதாகவும், இந்நிலை தொடருமாக இருந்தால் பெரியளவிலான கால்நடை வளர்ப்பாளர்கள் மாத்திரமே நாட்டில் எஞ்சுவார்கள். இதனூடாக சர்வாதிகார போக்கு உருவாகுமெனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இவ்வருடம் ஜனவரி மாதத்தில் கால்நடைகளுக்கான உணவு தொன் ஒன்றின் விலை 98 ஆயிரம் ரூபாயாகக் காணப்பட்டது. எனினும் தற்போது இதன் விலை மும்மடங்காக அதிகரித்து இரண்டு இலட்சத்து 78 ஆயிரமாக காணப்படுகிறது.

கால்நடைகளுக்கான உணவுகளில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகளால் பால் உற்பத்தி 30 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதோடு, கால்நடைகளுக்கான உணவுகளை இறக்குமதி செய்வதற்காக வருடமொன்றுக்கு அரசாங்கம் 300 கோடி ரூபாய்க்கும் அதிகளவான பணத்தை செலவிடுவதாகவும் தெரிவித்தார்.



## எரிபொருள் இறக்குமதியில் சட்டத்திருத்தம்

பா.நிரோஸ்



தெரிவு செய்யப்பட்ட பொருளாதாரத் துறையினருக்குத் தேவையான எரிபொருளை அவர்களே இறக்குமதி செய்து பயன்படுத்திக்கொள்வதற்கான சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

இதன்படி, 2002ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள எரிசக்தி அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது என்றார்.

## மூன்று மாதங்களுக்கு சீமெந்து வாங்காதீர்கள்



சீமெந்து தட்டுப்பாடு, விலை அதிகரிப்புக்குப் பின்னால் மாபியாக்கள் இருப்பதாகத் தெரிவிக்கும் தேசிய கட்டுமான சங்கத்தின் தலைவர் சுசந்த லியனாராச்சி, மூன்று மாதங்களுக்கு சீமெந்து வாங்குவதை பொதுமக்கள் நிறுத்தினால் பிரச்சினைகள் தீரும் எனவும் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டில் தயாரிக்கப்படும் சீமெந்து மூடை ஒன்றின் விலை 2,750 ரூபாயாகவும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சீமெந்து மூடையின் விலை 2,850 ரூபாயாகவும் காணப்படுகிறது. உள்நாட்டு உற்பத்தி செய்யப்படும் சீமெந்தின் விலை 400 ரூபாயாலும், இறக்குமதி செய்யப்படும் சீமெந்தின் விலை 500 ரூபாயாலும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சீமெந்து தட்டுப்பாடு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சீமெந்தும் சந்தைகளுக்கு முறையாக விநியோகிக்கப்படுவதில்லை. இதில் மாபியாக்கள் இருக்கிறார்கள். வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் அனைத்தையும் மக்கள் இடைநிறுத்தி சீமெந்து வாங்குவதை பொதுமக்கள் மூன்று மாதங்களுக்கு நிறுத்துவார்களாக இருந்தால், பதுக்கி வைக்கப்பட்டுள்ள சீமெந்து உள்ளிட்ட கட்டட நிர்மாணப் பொருட்கள் அனைத்தும் வெளியில் வரும் எனவும் தெரிவித்தார்.

2/3 உள்ளதால்

## கோட்டா, மஹிந்தவை பதவி விலக வேண்டுமென கூற முடியாது

பா.நிரோஸ்

ஜனாதிபதி, அரசாங்கம் பதவி விலகுவது தொடர்பில் பாராளுமன்றத்துக்குள்ளேயே தீர்வுக்காணப்பட வேண்டுமென தெரிவிக்கும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நாலக கொடஹேவா, மூன்றிலிரண்டு பெரும்பான்மை அரசாங்கத்துக்கு உள்ளது. எனவே ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக வேண்டுமென எவராலும் கூற முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய (26) ஊடகவியலாளர் சந்திப்பில் ஜனாதிபதி, அரசாங்கம் பதவி விலக வேண்டுமென்கிற கருத்துத் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இப்பிரச்சினைக்கு பாராளுமன்றத்தின் ஊடாகவே தீர்வு காணப்பட வேண்டும். நாட்டில் அரசியல் போராட்டங்கள் எல்லாக் காலக்கட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை நாம் தவறெனக்கூற முடியாது. மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் காரணமாகவே அவர்கள் போராடுகிறார்கள்.

ஜனாதிபதி, பிரதமரை எவ்வாறு பதவிகளில் இருந்து மாற்றலாம் என்பது அரசியலமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடைமுறையையே பின்பற்ற வேண்டும். இதற்கு அப்பால் எதையும் செய்ய முடியாது.

பாராளுமன்றத்தின் ஊடாக பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டாலும் பெரும்பான்மை அடிப்படையிலேயே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. பாராளுமன்றப் பெரும்பான்மை அரசாங்கத்துக்கு இருக்கும்நிலையில் ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக வேண்டுமென கூற முடியாது என்றார்.

நாட்டுப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சர்வகட்சிகளைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடு. எமது நிலைப்பாடும் அதுவே எனவும் தெரிவித்தார்.

## ரணிலை மனசாட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளன

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளில் இருந்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே நாட்டை மீட்டெடுக்க முடியுமென, பெரும்பான்மையான மக்களின் மனசாட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

ரணிலால் மாத்திரமே தற்போதைய நெருக்கடி நிலைமையில் இருந்து நாட்டை மீட்க முடியுமென மகாநாயக்கர்கள், நிபுணர்கள் என அடித்தட்டு மக்கள் வரையில் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனினும் இதனை வெளிப்படையாகக் கூறுவதில் அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

உலக பணவீக்க சுட்டெண்ணில் இலங்கையை மூன்றாவது இடத்துக்கு கொண்டுவந்ததே தற்போதைய அரசாங்கத்தின் மூன்று வருட சாதனை எனவும் ருவன் விஜேவர்தன கூறியுள்ளார்.



ஈஸ்டர் தாக்குதல்

## எதையும் மறைக்கும் தேவை அரசாங்கத்துக்கு இல்லை



பா.நிரோஸ்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விவகாரத்தில் எதையும் மறைக்கும் தேவை அரசாங்கத்துக்குக் கிடையாதென அமைச்சரவை பேச்சாளர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் எதையும் மறைக்கும் தேவை அரசாங்கத்துக்கு இல்லை. அரசாங்கத்துக்கு தொடர்பாடல் பிரச்சினைகள் ஏதேனும் ஏற்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும் இத்தாக்குதல் தொடர்பில் தேவையான மேலதிக தகவல்களை நாட்டு மக்களுக்கும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் வழங்குவதற்கு வழங்குவதற்கு தயாராக இருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.


உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்

தமிழ்Mirror

பதிவு செய்வதற்கு

Dialog Type TM and send to 87798
Daily Rs.1/=+TAX

HUTCH Type TM and send to 2233
Monthly Rs.30/=+TAX

SLTMOBILET Type REG TM and send to 77012
Daily Rs.1/=+TAX



வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களுக்கு

# முதலீட்டு வாய்ப்பு

நிதர்சன் வினோத்

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு இலங்கையில் முதலீடு மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கி கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

“வெளிநாட்டில் வாசிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு வரவழைத்து முதலீடு மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் பொருட்டு, அரசாங்கம் 11 அம்ச கொள்கை திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது” என்றார்.



வட மாகாணத்தில் இரண்டு வருடங்களில் விவசாயத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் தயார் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்லாது பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பங்கள், கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவர்கள், முதியவர்கள், சமுர்த்தி பயனாளிகள், நிரந்தர வாழ்விடங்கள் அற்றவர்கள் தொடர்பிலும் தொடர்ச்சியாக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

வடக்கில் எரிபொருள், அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் என்பவற்றை தடையின்றி வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவித்த அவர், தீவக பகுதிகளின் தேவைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி வருகின்ற நிலையில், அரச சேவையின் மூலம் மக்களிடமே தேடிச் சென்று குறை தீர்க்கும் கலாசாரம் மென்மேலும் அதிகரிக்கப்படும் என்றார்.

போதைப்பொருள் விற்பனை

## யாழில் 8 பெண்கள் 6 மாதங்களில் கைது

நிதர்ஷன் வினோத்



யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலை அடுத்து, அரியாலை பகுதியிலுள்ள வீடொன்றில் 2 கிலோ கிராம் கஞ்சாவுடன் 49 வயதான பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உபபொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான குழுவினர் அவ்வீட்டை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர். இதன்போது 2 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

யாழில் போதைப்பொருள் விற்பனையில் பெண்கள் ஈடுபடுவது அதிகரித்துள்ளது. இந்நிலையில், கடந்த 6 மாதங்களுக்குள் யாழில் 8 பெண்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புதிய அதிபர் வேண்டாம்; பழைய அதிபரே வேண்டும்

நிதர்ஷன் வினோத்



புதிய அதிபரை நியமிக்காது பழைய அதிபருக்கு இடமாற்றம்! புதிய அதிபர் எமக்கு வேண்டாம் பழைய அதிபரே வேண்டும் யாழ் சுழிபுரம் காட்டுப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று (26) முன்னெடுக்கப்பட்டது.

## திருடிய இடத்திலிருந்தே மோட்டார் சைக்கிள் மீட்பு

எம்.றொசாந்த்

இயங்கு நிலையிலேயே விட்டுவிட்டு ஆலய தரிசனத்தில் ஈடுபட்டிருந்தபோது காணாமல் போயிருந்த மோட்டார் சைக்கிள், அந்த ஆலயத்தின் வளாகத்திலிருந்து மறுநாள் மீட்கப்பட்டது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணம், அராலி வீதியில், கல்லுண்டாய் வெளியூடாக ஞயிற்றுக்கிழமை (24), மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன், அங்குள்ள வைரவர் ஆலயத்துக்கு முன்பாக தனது மோட்டார் சைக்கிளை இயங்கு நிலையில் விட்டுவிட்டு, வைரவரை தரிசனம் செய்துள்ளார்.

அப்போது, அங்குவந்த இளைஞன் ஒருவர், மோட்டார் சைக்கிளைத் திருடிக்கொண்டு அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளான்.

தரிசனத்தை முடித்துவிட்டு திரும்பிவந்த இளைஞன், மோட்டார் சைக்கிள் காணமல் போனமை தொடர்பில், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில், காணமல் போயிருந்த மோட்டார் சைக்கிள், வைரவர் ஆலயத்துக்கு முன்பாக, அநாதரவான நிலையில் திங்கட்கிழமை (25) நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

அது தொடர்பில், யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் மோட்டார் சைக்கிளை மீட்டு சென்றுள்ளனர்.

## முகமாலையில் கண்ணிவெடி அகற்றுவதை பார்வையிட்டார் ஜூலி

யது பாஸ்கரன்



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், முகமாலை பகுதிக்கு, நேற்றுக்காலை 7.45 மணியளவில் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அமெரிக்க கொடையாளர்களின் நிதியுதவியில் முகாமாலை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை பார்வையிட்டுள்ளார்.

‘டாஸ்’ நிறுவனத்தால் குறித்த பகுதியில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவருக்கு மனிதநேய பணி தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து குறித்த பகுதியில் மேற்கொள்ளப்படுவரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை பார்வையிட்டதுடன், கள ஆய்வையும் மேற்கொண்டு அங்கு கடமையில் ஈடுபட்டுள்ள மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

அப்பகுதியிலிருந்து அகற்றப்பட்ட ஆபத்தான வெடிப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு தூதுவருக்கு விளக்கமளிக்கப்பட்டது. அப்பகுதியில், கண்ணிவெடிகள் காணப்படுகின்றமை குறித்தும், அகற்றவேண்டிய தேவைகள் தொடர்பிலும் அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டது.



## தந்தை செல்வாவின் 45 ஆவது நினைவு தினம்

எம்.றொசாந்த்

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 45 ஆவது நினைவு தினம் நேற்று (26) அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில், நேற்று (26) செவ்வாய்க்கிழமை ஒய்வு நிலை ஆயரும் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு தலைவருமான கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நினைவுத் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் சிவில் சமூக உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.



“வர்த்தகர்கள், உணவக உரிமையாளர்கள்

## மனச்சாட்சியுடன் நடக்க வேண்டும்”

எம்.றொசாந்த்




தேநீர், வடை போன்றவற்றை உண்பதற்கே அதிக பணத்தை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்த தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் நிஷாந்தன், இந்த நேரத்தில்தான் வர்த்தகர்கள், உணவக உரிமையாளர்கள் மனச்சாட்சியுடன் நடக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

யாழ். ஊடக மையத்தில் திங்கட்கிழமை (25) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி என்பது, நாடு முழுவதும் உள்ள மக்களை பாதித்தாலும் தென்னிலங்கையையே அதிகளவில் பாதிக்கின்றது. வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை கடந்த 30 வருடங்களாக தமிழ் மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்பது யதார்த்தமான உண்மை. இன்றுதான் தென்னிலங்கை மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்றார்.

# “ஹக்கீமின் இரட்டை வேடம்”

ஏ.எச்.ஏ. ஹூஸைன்

என்னை உடனடியாக கட்சியிலிருந்து நீக்கியதாக கூறப்படும் எந்தத் தகவலும் இதுவரை எனக்கு வரவில்லை. அவ்வாறு கிடைத்தால் அதற்குத் தகுந்த பதிலளிப்பேன் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் சுற்றாடல் அமைச்சருமான நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

2020 ஓகஸ்ட் 05ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன வெற்றி பெற்று, இரண்டு மாதங்களுக்கு பின்னர் 2020 ஒக்டோபர் மாதமளவில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்புமனுவினூடாக தற்போதைய பாராளுமன்றத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரான என்னை, தற்போது அதிகாரத்தில் உள்ள ஸ்ரீ லங்கா



பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் தீர்மானமே காரணமாகும்.

அவ்வாறிருக்கையில் முறையான விசாரணைகள் எதுவுமின்றி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து என்னை திடீரென நீக்கிவிட்டதாகக் கூறி, அவர் எவ்வாறு இந்த நாட்டைத் தவறாக வழிநடத்த முடியும்?

அயல் நாடொன்றில் இலங்கையின் தூதுவராக இருக்கும் அவரது நண்பருடன் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸினதோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியின் அனுமதி இன்றியும் மேன்மைதங்கிய ஜனாதிபதி கோட்டாபயவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியுடன் உறுதியான புரிந்துணர்வுக்கும் ரவூப் ஹக்கீம் வந்ததை அவரால் மறுக்க முடியுமா?

அதனை தொடர்ந்து, 2020 ஒக்டோபர் 18ஆம் திகதி ரவூப் ஹக்கீமின் கார்னிவல் அலுவலகத்தில் ஜனாதிபதியின் சகோதரர் பசிலுடன் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் சந்திப்பு நடத்தியதை அவர் மறுக்க முடியுமா?

அந்தச் சந்திப்பில் ரவூப் ஹக்கீமின் அழைப்பின் பேரில் நான் உட்பட எம்.சி. பைசால் காசிம், எச்.எம்.எம். ஹரீஸ், தௌபீக் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன் எங்கள் அனைவரையும் 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறும் பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறும் எங்களிடம் ஹக்கீம் கேட்டுக் கொண்டார்.

நான் பொது ஜன பெரமுனவுடன் இணைந்து பணியாற்ற வேண்டுமென ரவூப் ஹக்கீம் என்னை கட்டாயப்படுத்தியதற்கு ஏற்ப நான் செயற்பட்டதனை ரவூப் ஹக்கீம் நன்றாக அறிந்திருந்ததால் இவ்விடயம் தொடர்பாக ரவூப் ஹக்கீம் என்மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்நிலையில், வரவு- செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததற்காக என்னை கட்சியில் இருந்து நீக்கிவிட்டதாக இப்போது திடீரென்று ரவூப் ஹக்கீம் கூறுகிறார். குறித்த நீக்கமும் கூட, என்னை நாட்டின் அவசர பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தனக்கு உதவுமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டு, அமைச்சர் பதவியினை பெற்றுக் கொண்டதன் பின்னரே இக்குறித்த நீக்கம் ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

## குடும்பஸ்தரை காணவில்லை

எப்.முபாரக்



கந்தளாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மதுரசா நகர் இல 163/1 பேராறு பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான என்.ரபிஸ் என்பவரை, ஒருவார காலமாக காணவில்லையென கந்தளாயில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக காணமல் போனவரின் தந்தை நசார் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை ( 22 ) அதிகாலையிலிருந்து காணாமல் போய் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் கடைசியாக, சிவப்பு கலர் டி சேட் அணிந்திருந்தார். அத்துடன், EP UU 4187 இலக்கத் தகடுடைய பல்சர் மோட்டார் வண்டியுடன் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவரை யாராவது கண்டால் 0750540619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியத்தருமாறு அவரது தந்தை கேட்டுள்ளார்.

## 45வது ஆண்டு நினைவு நிகழ்வு

வா.கிருஸ்ணா



இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் தந்தை செல்வாவின் 45வது ஆண்டு நினைவு நிகழ்வுகள், மட்டக்களப்பு தந்தை செல்வா சதுக்கத்தில் நேற்று (26) நடைபெற்றன.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலியுடன், அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து தந்தை செல்வா ஞாபகார்த்த உரைகளும் இடம்பெற்றன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதை படத்தில் காணலாம்.

## பெருநாள் முற்பணம் வழங்கப்பட்டது

எம்.எஸ்.எம். ஹனீபா

அரச சேவை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் கடமையாற்றும் முஸ்லிம் உத்தியோகத்தர்களுக்கு நோன்புப் பெருநாள் முற்பணம் வழங்கப்பட்டுள்ளது.

பொது சேவைகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் இதற்கான சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. நோன்புப்பெருநாளுக்கு 14 நாள்கள் முன்னதாக முற்பணம் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சுகளின் செயலாளர்கள், இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள் ஆகியோருக்கு குறித்த சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இச்சுற்றுநிருபத்தின் பிரகாரம் நோன்புப்பெருநாள் முற்பணமாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை 1,250 ரூபாய் என்றடிப்படையில் எட்டு மாதங்களுக்கு சம்பளத்திலிருந்து வட்டியின்றி மீள அறவீடு செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.



## பெட்ரோலுக்கான வரிசை குறைகிறது

சகா

அம்பாறை மாவட்டத்தில், கடந்த பல வாரங்களாக, பெட்ரோலுக்காக நீண்ட வரிசையில் வாகனங்களுடன் மக்கள் காத்திருந்தனர். எனினும், அந்த வரிசை, நேற்று (26) குறைந்திருந்தது.

மாவட்டத்திலுள்ள சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் கடந்த காலங்களில் 2 கிலோ மீற்றர் நீளமான வரிசை காணப்பட்டது.

எரிபொருட்கள் முறையாக கிடைக்காமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர். வாகனங்களின் ஓட்டமும் குறைந்தே காணப்பட்டது. எனினும், நேற்றையதினம் வரிசை குறைந்திருந்தது.

அங்குள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் ஊடாக, மக்கள் தாராளமாக எரிபொருட்களை கொள்வனவு செய்துவருகின்றனர்.

## உலருணவுப் பொதிகள் வழங்கி வைப்பு

ஹஸ்பர்

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவை உள்ளடக்கிய தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வானது பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று (26) இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற இந்த உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வானது, சர்வோதயம், ஹேமாஸ், டயலொக் நிறுவனங்கள் இணைந்து 50 பயனாளிகளுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தன. ஒவ்வொரு பொதியிலும், சுமார் 2,500 ரூபாய் பெறுமதியான பொருட்கள் இருந்தன.



ஒரு இலட்சம் உலருணவுப் பொதிகள் வழங்கும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் குறித்த பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் விசேட தேவையுடையோர், பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள், வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்கள் என்றடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்காக வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சர்வோதய நிலைய வடக்கு,கிழக்கு பணிப்பாளர் வீ.ஜீவராஜ், டயலொக் நிறுவன பிராந்திய முகாமையாளர், சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.





# “நாங்கள் பிச்சைக்காரர்கள் அல்லர்; ஆனா நீ ஆக்கிடுவ”

## ரொசெல்ல போராட்டத்தில் ஒலித்தவை

வாழ்க்கைச் செலவு அதிகரித்தல், எரிபொருள் விலையேற்றம், மின்வெட்டு, காஸ் தட்டுப்பாடு ஆகியவற்றுக்கு எதிர்த்தும் அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், பேரணிகள் நடத்தப்படுகின்றன.

ஹட்டன், வட்டவளை, ரொசல்ல பிரதேசங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதில் பங்கேற்றிருந்தவர்கள், “நாங்கள் பிச்சைக்காரர்கள் அல்லர்; ஆனா நீ ஆக்கிடுவ”, “கோட்டாவே வீட்டுக்குப் போ” “எங்களிடம் உரம் இல்லை; நாட்டுக்கே ஜூரம்”, “கோட்டாபய நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இதேவேளை, தங்களுக்கு அதிகரிக்கப்பட்ட 1,000 ரூபாய் சம்பளம் கிடைக்கவில்லை. நாளாந்தம் வழங்கப்படும் வேலை நாள்களும் குறைக்கப்பட்டுள்ள. ஆகையால், மாதாந்தம் பெற்றுக்கொள்ளும் குறைந்தளவான சம்பளத்தை வைத்துக்கொண்டு வாழமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் சுட்டிக்காட்டினர்.





# தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் இ.தொ.கா முக்கிய பேச்சு


நாட்டில் ஏற்பட்டுள்ள பண வீக்கத்தின் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பின் அவசியம் குறித்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், முக்கிய பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

காங்கிரஸின் தலைமை காரியாலயமான சௌமிய பவனில் தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையப் பிரதிநிதிகளுடனேயே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதில், காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய தொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்து ஆழமாக ஆராயப்பட்டது.

# கறுப்பு மே தினம்



## அழைக்கிறார் இராதா; 28 இல் கைகோர்க்குமாறு கேட்கிறார்

■ எஸ்.கணேசன்

நாளை 28 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடைபெறுகின்ற தொழிற்சங்க போராட்டங்களில், மலையக தொழிற்சங்கங்களும் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன், தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் அணைவரும் இணைந்து கொள்ள வேண்டும். தோட்டத் தொழிலாளர்களும் இதற்கு ஆதரவு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

விலைவாசி உயர்வு, அரசியல் அராஜகம் போன்ற பிரச்சினைகள் இடம்பெறுக்கின்றன. அதனை பெரும்பாலானவர்கள் எதிர்க்கின்றனர். நாங்களும் அதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்றார்.

ஹட்டனில் நேற்று (26) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ள இ.தொ.காவின் செயலை நாங்கள் வரவேற்கின்றோம். காலம் கடந்து இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தாலும் நல்ல முடிவை எடுத்துள்ளார்கள். கோட்டா, மஹிந்த, ராஜபக்ஷ குடும்பமே வீட்டுக்குப் போக வேண்டுமென எல்லோரும் இணைந்து போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

அரசாங்கம் கலைய வேண்டும்; புதிய அரசாங்கம் உருவாக வேண்டும். அப்போதுதான் இலங்கையில் ஒரு சுமூகமான நிலைமை உருவாகும்.

இம்முறை மே தினத்தை மக்கள் எதிர்ப்பு மே தினமாக, கறுப்பு மேதினமாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொருளாதார நிலைமை மிக மோசமாக இருக்கின்றது. உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு 100 சதவீதமான சம்பள உயர்வு தரவேண்டும் என்பதுதான் மே தின கோஷங்களாக இருக்கும்.

ஒவ்வொரு தோட்டத்திலும் கறுப்பு கொடிகளை ஏந்தி மே தினத்தை நடத்த வேண்டும் என்பதே எங்களின் வேண்டுக்கோளாக இருக்கின்றது. அரசாங்கத்தின் பெரும்பான்மை மிக விரைவில் வீழ்ச்சியடையும் என்றார்.

# ஒரு நாள் செயலமர்வு

■ எம். செல்வராஜா

‘வெறுக்கத்தக்க பேச்சுகளை தடுப்பதற்காக சமூக ஊடகங்களை பாவித்தல்’ தொடர்பான ஒரு நாள் செயலமர்வை, இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் பதுளை எப்.ஐ.ஓ.எய்ச் அமைப்பு, பதுளை ரிவர் சைட் விடுதியில் நடத்தியது.

டி.ஐ.ஆர்.சி. பதுளை மாவட்ட இணைப்பாளர்



இராமச்சந்திரன் ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் வளவாளர் ஹரித தகநாயக்க கருத்துரைத்தார்.



# சான்றிதழ் வழங்கி அங்கத்தவர்களாக இணைப்பு

■ எஸ். யோகா

கண்டி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 15 பேருக்கு சான்றிதழ் வழங்கி, மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் நலன்புரி அங்கத்தவர்களாக நியமனம் செய்யப்பட்டனர்,

மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் நலன்புரி நிலையத்தின் தலைவர் எம். எஸ்.எம் நசார் தலைமையில் இந்த நிகழ்வு, கம்பளை ஈடன் பாக் மண்டபத்தில் நடைபெற்றது,

மனித உரிமைகள் பாதுகாப்பு, நலன்புரி அங்கத்தவராக கம்பளை ஊடகவியலாளர் எஸ். லோகேஸ்வரன் அங்கத்தவராக இணைத்துக் கொள்ளப்பட்டார்.

# பாபரின் அலைபேசியுடன் ஓட்டமெடுத்த உறுப்பினர்

சிகையலங்காரம் செய்துகொள்வதற்காக, சலூனுக்கு வந்திருந்த உக்குவளை பிரதேச சபையின் உறுப்பினர், அங்கு சிகையலங்காரம் (பாபர்) செய்பவரின் அலைபேசியை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார்.

40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அலைபேசியையே அந்த உறுப்பினர் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டாரென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

முடியை திருத்துவதற்காக வந்திருந்த அந்த உறுப்பினர், வீட்டுக்கு அழைப்பொன்றை எடுப்பதற்காக அலை பேசியை வாங்கினார். எனினும், அதனை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். அவ்வாறு ஓடியவரை இதுவரையிலும் காணக்கிடைக்கவில்லை என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மண்ணெண்ணெய்க்கு வரிசை நீளுகிறது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் பிரதேசத்தில் தற்போது ஏற்பட்டுள்ள காஸ் நெருக்கடிக்கு மத்தியில், மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்வதற்காக நுகர்வோர், காலையில் இருந்து வரிசையில் நிற்கின்றனர். சிங்கள- தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் மண்ணெண்ணெய், இந்த எரிபொருள் நிலையத்தில் விநியோகிக்கப்பட்டது. எனினும், புத்தாண்டுக்குப் பின்னர், அந்த நிலையத்துக்கு மண்ணெண்ணெய் பவுசர் வரவில்லையென, எரிபொருள்



நிலையத்தில் பணியாற்றுவோர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஹட்டனிலுள்ள எரிபொருள் நிலையங்களில். டீசல் மற்றும் பெட்ரோல் தேவையான அளவு இருக்கிறது என்று எரிபொருள் நிலையங்களில் பணியாற்றுவோர் தெரிவித்தனர்.




# இலவச மருத்துவ முகாம்

■ பி.கேதீஸ்

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு நுவரெலியா மனித வள நிதியம், நுவரெலியா பிரதேச செயலகம், கிறேட்வெஸ்டன் தோட்ட நிர்வாகம் ஆகியன ஒன்றிணைந்து இலவச மருத்துவ முகாமை நடத்தியிருந்தது.

கிறேட்வெஸ்டன் பாடசாலையில் நேற்று (26) இடம்பெற்ற இந்த மருத்துவ முகாமில் பாடசாலை மாணவர்களும் கிறேட்வெஸ்டன் தோட்ட மக்களும் கலந்துகொண்டனர்.

இதன் ஆரம்ப நிகழ்வில், கிறேட்வெஸ்டன் தோட்ட வளாகத்தில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன. அதனை தொடர்ந்து மருத்துவ முகாம் இடம்பெற்றது.

இந்நிகழ்வுகளில் தோட்ட அதிகாரி சரத் ரணவீர, உதவி அதிகாரி தினேஸ் மெதவெக்க, மனித வள நிதியத்தின் பிராந்திய பணிப்பாளர் கே.ஏ.குலநாயக்க, நுவரெலியா பிரதேச உதவி செயலாளர் பிரதீபிக்கா விஜயசூரிய, லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி ரெயிஸ்னி, கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி சுதர்சன், கிறேட்வெஸ்டன் பாடசாலை அதிபர் எம். ஐ.எம். பாரீஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம், பொது சுகாதார அதிகாரிகள், நுவரெலியா பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,கிராம உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.




# வழக்கறிஞர்கள் கவனயீர்ப்பு

■ நடராஜா மலர்வேந்தன், செல்வராஜா

பதுளையில் வழக்கறிஞர்கள் சங்கத்தினர், அரசாங்கத்திற்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டத்தில் நேற்று (26) ஈடுபட்டிருந்தனர். ‘மக்களின் இறைமைக்கு தலைவணங்கு’ எனும் தொனிப்பொருளிலேயே இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# பாத யாத்திரையில் பிரமாண்டமான காகம்

■ மொஹமட் ஆஸிக்

அடக்குமுறை அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐக்கிய சக்தி பாதயாத்திரை கண்டியில் இருந்து நேற்று (26) ஆரம்பமானது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

அதில், பிரமாண்டமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த காகம், வாகனத்தின் மீது வைக்கப்பட்டிருந்தது. அத்துடன், பொருட்களின்



விலையேற்றம் உள்ளிட்டவையை காண்பிக்கும் வகையிலான உருவங்களும், ராஜபக்ஷர்களை கேலி செய்யும் வகையிலான உருவப்படங்களும் பாதயாத்திரையில் இணைத்து க்கொள்ளப்பட்டன.

# மட்டக்குதிரை சவாரி மந்தமானதால் பாதிப்பு

■ ஆ.ரமேஸ்.

நுவரெலியா குதிரை பந்தைய பகுதியில் மட்டக்குதிரை சவாரி மந்தமானதால், மட்டக்குதிரை சவாரியை நம்பி வாழும் 35க்கும் மேற்பட்ட குடும்பங்கள், தங்களுடைய வாழ்வாதரத்தை கொண்டு செல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் வசந்தகால நிகழ்வுகளே தமக்கான வாழ்வாதாரத்திற்கு வசந்தம் வீசும் காலம். அப்பொழுதுதான் வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியுமெனத் தெரிவித்த அவர், சவாரிகள் குறைந்துள்ளமையால், வருமானமின்றி அவதியுறுவதாக தெரிவித்தனர்.



நுவரெலியா ரேஸ்கோஸ் லயம், கல்வேஸ் கிராமத்தை சேர்ந்த 35க்கு அதிகமானவர்கள் மட்டகுதிரை சவாரியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மட்டக்குதிரை சவாரியை ஆரம்பிக்கும் நுவரெலியா ரேஸ்கோஸ் நுழைவாயில் பகுதிக்கு அருகில் எரிபொருள் நிரப்பு நிலையம் உள்ளது. இந்த நிலையத்துக்கு எரிபொருள் கொண்டுவரும் போது, நுவரெலியா-பதுளை பிரதான வீதியில் வாகன நெரிசல் ஏற்படுவதால் வீதி மூடப்படுகிறது.

இதனால், உல்லாச பயணிகள் சவாரிக்கு வருவதும் குறைகின்றது இதுவும் வருமானத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தியது. அதேநேரத்தில், சவாரியில் ஈடுபடும் நபர்கள் பலர், மட்டக்குதிரை உரிமையாளர்களிடம் குதிரைகளை வாடகைக்குப் பெற்று சவாரியை முன்னெடுப்பதாகவும், கிடைக்கும் வருமானத்தில் அரைவாசியை வாடகை பணமாக செலுத்துவதாகவும் தெரிவித்தனர்.

# மாயமான்களாகும் இலங்கையின் நல்லகாலங்களும் நல்லமாற்றங்களும்

கருத்துக்கணிப்பொன்றில் 78.6 சதவீதமான மக்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிவிலக வேண்டும் என்று வாக்களித்துள்ளார்கள். தமிழ்மிரரின் சகோதரப் பத்திரிகையான 'டெய்லிமிரர்', நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு என்ன? என்று கேட்டு, மக்கள் மத்தியில் நடத்திய கருத்துக்கணிப்பிலேயே, மக்களின் விருப்பம் மேற்படி வெளிப்பட்டுள்ளது.

"69 இலட்சம் மக்களின் வாக்குகளால் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டேன்" என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடிக்கடி பெருமை பேசிக் கொள்வார். ஆனால், இப்போது அந்த மக்கள் செல்வாக்கு இல்லை என்பதை, 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதுபோல், 78.6 சதவீமான மக்கள், ஜனாதிபதியை வேண்டாம் என்று நிராகரித்திருக்கிறார்கள். கருத்துக் கணிப்புகள் மட்டுமல்ல, இரவு பகலாக வீதியில் இறங்கி போராடிக் கொண்டிருக்கும், மக்கள் எழுச்சியிலும் புரட்சியிலும் கூட, ராஜபக்ஷர்களை வீட்டுக்குத் துரத்தும் வசனங்களே, தாரக மந்திரங்களாக அதிர்கின்றன.

மக்கள் அரசியல்வாதிகளிடமிருந்து தீர்வை எதிர்பார்த்திருக்கையில், அரசியல்வாதிகளோ, அரசியல் மாற்றங்கள் குறித்து விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதே இங்கு சிக்கலுக்குரிய விடயமாக உள்ளது.

ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரங்களை குறைக்கும் பிரதமரின் முன்மொழிவு, காலத்தை இழுத்தடிக்கும் கைங்கரியத்துக்குள் சென்றுவிட்டது. இது ஜனாதிபதி தனக்கு எதிராக எய்யப்பட்ட அம்பை, வெற்றிகரமாகத் தடுத்தாற்கொண்டு விட்டார் என்பதைக் குறிக்கிறது.

அத்துடன், எதிர்க்கட்சியால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி அளித்தாலும், மக்கள் இன்று எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கும் பஞ்சங்களுக்கும் தீர்வு கிடைக்குமா?

நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி பெற்றால், மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சரவையும் அவரைச் சார்ந்தவர்களும் அரசாங்கத்தில் இருந்து வெளியே வந்துவிடுவர். அதன்பின்னர் என்ன நடக்கும் என்பது, எவருக்கும் தெளிவில்லை. செயற்படாத பாராளுமன்றம் உள்ள நிலையில், ஜனாதிபதியின் அதிகாரங்கள் வரண்முறையின்றி அதிகரித்துக் காணப்படும். அந்த நிலை, சட்டியில் இருந்ததை அடுப்பில் தூக்கிப் போட்டதாகத்தான் இருக்கும்.

இங்கு, ராஜபக்ஷர்களை தொடர்ந்தும் அரசாட்சியில் இருத்தி, நாட்டை கொள்ளையடிக்க விடக்கூடாது என்பதுதான் அனைத்து மக்களின் எதிர்பார்ப்பாகும். ஆனால், அவர்களைப் பதவிகளில் இருந்து அசைக்கும் விதத்தில் போராட்டங்கள் மேலும் வலுப்பெற்று, நாடு ஸ்தம்பித நிலைக்குச் சென்றால், அங்கும் பாதிக்கப்படப் போவது சாதாரண மக்களே! ஆனால், ஒன்றறை இழந்துதான் ஒன்றைப் பெறவேண்டும்; அல்லது ஒன்றைப் பெறுவதற்காக இன்னொன்றை இழக்க வேண்டும் என்பதே இயற்கையின் நியதி.

இருந்த போதிலும் சாதாரண மக்களை துன்பத்தில் வீழ்த்த முடியாது. இதை உணர வேண்டியது பதவி வெறியில் திளைத்திருக்கும் ராஜபக்ஷர்களாவர்.

ஆனால், இன்னொரு சிக்கலும் இங்கு உள்ளது, மக்களின் குரலுக்கு செவிசாய்த்து, ராஜபக்ஷர்கள் அனைவரும் பதவிவிலகிச் செல்கின்றார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்படி ஒரு நிலையில் நாட்டை பொறுபேற்று வழிநடத்திச் செல்வது யார்? அப்பொழுது அரசாங்கத்தை எவ்வாறு அமைப்பது? போன்ற கேள்விகள் தொக்கி நிற்கின்றன. இலங்கைக்கு நல்ல காலம் பிறந்து, நல்ல மாற்றங்கள் உருவாகும் என்பதெல்லாம் மாயமான்களாகத்தான் தெரிகின்றன.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# ஜனாதிபதி - பிரதமர் பலப்பரீட்சை



எம்.எஸ்.எம். ஐயூப்

தற்போது, பொதுமக்களின் தேவைகளும் அரசியல்வாதிகளின் தேவைகளும் ஒன்றுக்கு ஒன்று முரணானதாகவே அமைந்துள்ளன. கடும் பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கி, வாழ்க்கையே வெறுத்துப் போகும் நிலையில் உள்ள மக்கள், அந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் இருந்தும் ஏனைய அரசியல்வாதிகளிடம் இருந்தும் தீர்வை எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அரசியல்வாதிகளோ அரசியல் மாற்றங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

மேலும் குறிப்பிட்டுக் கூறுவதாக இருந்தால், வானளாவ உயரும் விலைவாசிக்கும் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாட்டுக்கும் மின் வெட்டுக்கும், பொதுமக்கள் தீர்வைத் தேடுகிறார்கள். அரசியல்வாதிகள், 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதைப் பற்றியும் இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதைப் பற்றியும், விவாதித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்த நிலையில், எதையும் சாதிக்கக் கூடிய சர்வ வல்லமையுள்ளவர்கள் என தம்மைக் காட்டிக் கொண்டு இருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், நாட்டு மக்கள் எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாது திகைத்து நிற்கிறார்கள்.

பொருளாதார பிரச்சினைகள் காரணமாக, நாடெங்கிலும் மக்கள் கொதித்தெழுந்து வீதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகிறார்கள். அந்தப் போராட்டங்கள், பொதுவாக சாத்வீகமனதாக இருந்த போதிலும், கடந்த 19ஆம் திகதி ரம்புக்கனையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றின் போது, பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்து, 20க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கடந்த ஒன்பதாம் திகதி, கொழும்பு, காலிமுகத் திடலில் சமூக வலைத்தள ஆர்வலர்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், இரவு பகலாக இன்னமும் தொடர்கிறது. இதுவரை ஜனாதிபதி, பிரதமர் உட்பட பல அமைச்சர்களின் வீடுகள் முன்னும் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி, அவர்களை வெளியே தலைகாட்ட முடியாத நிலைக்கு ஆளாக்கியுள்ளனர்.

பொருளாதார பிரச்சினைகள் காரணமாக, மார்ச் 31ஆம் திகதி, மிரிஹானையில் ஜனாதிபதியின் வாசஸ்தலத்தின் முன்னால் வெடித்த போராட்டம், "உடனடியாகவே ஜனாதிபதி பதவி விலக வேண்டும்" என்ற கோஷத்துடன், அரசியல் வடிவத்தை எடுத்துக் கொண்டது. 'கோட்டா கோ ஹோம்' (கோட்டா வெளியேறு) என்ற அரசியல் சுலோகத்தையே இன்று, எங்கும் கேட்கவும் பார்க்கவும் கூடியதாக இருக்கிறது.

இந்த நிலையில் தான், விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்ட அரசாங்கத்தின் சிறிய கட்சிகளின் தலைவர்கள், ஏப்ரல் முதலாம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து, அப்போதைய அமைச்சரவைக்கு பதிலாக சகல கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட இடைக்கால அமைச்சரவையை அமைக்க வேண்டும் என ஆலோசனை வழங்கினர். காபந்து அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அன்றே கூறியிருந்தார்.

பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாதிருந்த ஜனாதிபதி, விமல் குழுவினரோடு இணங்கி மூன்றாம் திகதி தமது அமைச்சர்களை இராஜினாமாச் செய்யச் செய்து, ஏனைய கட்சிகளுக்கு அமைச்சுப் பொறுப்புகளை ஏற்குமாறு அழைப்பு விடுத்தார்.

உண்மையிலேயே, இந்த ஆலோசனையிலும் ஜனாதிபதி அதற்கு இணங்கியதிலும், மக்கள் நலன் சார்ந்து தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. விமல், கம்மன்பில ஆகியோர், ஏற்கெனவே மார்ச் மூன்றாம் திகதி அமைச்சர் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டு இருந்தனர். சர்வகட்சி இடைக்கால அமைச்சரவை என்ற போர்வையில், அமைச்சரவைக்குள் புகுந்து கொள்வதே அவர்களது நோக்கமாக இருக்கலாம் என ஊகிக்கலாம்.

அதேவேளை, பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது தடுமாறும் ஜனாதிபதி, அந்த ஆலோசனையின் மூலம், மேலும் சிறிது காலத்துக்கு, மக்களை திசை திருப்பலாம் என்று நினைத்திருக்கலாம்.

இந்தக் கருத்தை ஆரம்பத்தில் முன்வைக்கும் போது, பிரதமர் பதவியைப் பற்றி எதையும் குறிப்பிடாத விமல்-கம்மன்பில குழுவினர், பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பதவி விலக வேண்டும் என்று கூறலாயினர். இடைக்கால அரசாங்கம் பற்றிய ஆலோசனையிலும் இந்த ஆலோசனையிலும் வலுப்பெற்று வரும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் கோபத்தை ஓரளவு தணித்து, ஜனாதிபதியை பாதுகாக்கும் நோக்கமும் இருக்கலாம்.

அதன் மூலம், தாம் ஜனாதிபதியின் நம்பிக்கைக்குரியவர்கள் என்ற அந்தஸ்தை மீண்டும் பெற்றுக் கொள்வதே, விமல் குழுவினரின் நோக்கமாகவும் இருக்கலாம்.

மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து விமல் வீரவன்ச விலகிய நாளிலிருந்தும், கம்மன்பில, சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஜாதிக ஹெல உறுமய கட்சியிலிருந்து விலகிய நாளிலிருந்தும், மஹிந்தவின் பெயரைக் கூறியே அரசியல் நடத்தி வந்தனர்.

2015ஆம் ஆண்டு மஹிந்த, ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த போது "மஹிந்தவோடு எழுவோம்"என்ற கோஷத்துடன், ஆர்ப்பாட்டத் தொடர் ஒன்றை ஆரம்பித்து, தாமும் பயன் பெறும் வகையில் மீண்டும் மஹிந்தவை பதவியில் அமர்த்தவும், அவர்கள் நடவடிக்கை எடுத்தனர். இப்போது அவர்கள் தமது அரசியல் இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, அதே மஹிந்தவை பலிகொடுக்க முயல்கின்றனர்.

அதற்காக, அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தி முன்வைக்கப் போகும் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கவும் தயாராக இருக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க, நாட்டில் பொருளாதார நெருக்கடி காரணமாகவும் மக்களின் ஆர்ப்பாட்டங்களின் காரணமாகவும் தற்போதைய அரசாங்கம் கவிழும் என்ற பயத்தில், தெற்கில் மக்கள் அபிப்பிராயத்தின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் தலைமை பிக்குகளும், பிரதமரைப் பலி கொடுத்துவிட்டு கோட்டாபயவின் ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்ள முற்பட்டுள்ளதாகவே தெரிகிறது. அவர்களும் இப்போது, பிரதமர் நீக்கப்பட வேண்டும் என்கின்றனர். மஹிந்தவின் நெருங்கிய சகாவாக இருந்த முன்னாள் அமைச்சர் டலஸ் அலகப்பெருமவும் அக்கருத்தைக் கூறி வருகிறார்.

தமது சகோதரனான பிரதமரோடு ஏனைய அமைச்சர்களையும் வெளியேற்றி, சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைத்தால், மக்கள் மனதில் புதிய நம்பிக்கையை உருவாகி, தம் மீதான கோபத்தைத் தணித்துக்கொள்ள ஜனாதிபதி நினைக்கிறார் போலும்! எனவே, அவரும் இப்போது பிரதமரை வெளியேற்றும் கருத்தை, சிறிது சிறிதாக ஏற்று வருகிறார்.

இதனிடையே, தற்போதைய பிரச்சினைகளுக்குக் காரணம் ஜனாதிபதியை சர்வாதிகாரியாக்கிய 20ஆவது அரசியலமைப்புத் திருத்தம் என்றும் எனவே இதனை இரத்துச் செய்து, பொருத்தமான திருத்தங்களுடன் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதே தீர்வுக்கு வழிவகுக்கும் என்றும் மைத்திரிபால சிறிசேன கூறினார். அந்தக் கருத்தும் இப்போது வெகுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் அதனை ஏற்றுள்ளது.

தம்மை வெளியேற்ற எடுக்கும் முயற்சிகளுக்கு, ஜனாதிபதியின் ஆதரவு இருப்பதாகக் கருதும் பிரதமர், இந்த 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் பற்றிய ஆலோசனையைத் தமக்குச் சாதகமாக பாவிக்க முயல்கிறார்.

அந்தத் திருத்தம், மீண்டும் கொண்டுவரப்பட்டால் ஜனாதிபதியின் அதிகாரம் குறையும். எனவே அந்தத் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதை, தாமும் ஆதரிப்பதாக மஹிந்த அறிவித்துள்ளார். இது, தமக்கு எதிரான ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு மஹிந்த கொடுத்த பதிலடியாகும்.

மஹிந்த இப்போது மிகவும் பலவீனமாகவே இருக்கிறார். சிலவேளைகளில் நடந்து செல்லவும் அவருக்கு மற்றொருவரின் துணை தேவையாக இருக்கிறது. இந்தநிலையில், அவர் மரியாதையுடன் பதவி விலகிச் செல்லாதிருக்க மற்றொரு காரணமும் இருக்கிறது. அவரது மகன் நாமல் ராஜபக்ஷவின் எதிர்காலமே அதுவாகும்.

நாமல் வளர்ந்து ஜனாதிபதியாவதற்கு உரிய வயதை அடையும் வரை, ஆட்சியைத் தம் கையில் வைத்திருக்கவே மஹிந்த 2010ஆம் ஆண்டு 18 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம், இரண்டு முறை மட்டுமே ஒருவர் ஜனாதிபதியாகலாம் என்றிருந்த வரையறையை நீக்கினார். இந்த நிலையில், தாம் பிரதமர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டால், தமது மகனின் கனவு பாழாய்ப்போகும் என்று அவர் நினைக்கிறார் போலும்.

எனவேதான் அவர் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து, பிரதமர் என்ற வகையில் தமது அதிகாரங்களை அதிகரித்துக் கொள்ள முயல்கிறார். அந்த வகையில், இப்போது பொருளாதார நெருக்கடியானது அதிகார பீடத்தில் இருக்கும் ஒரு குடும்பத்தின் உட்பூசலாகவும் மாறியுள்ளது.

பொருளாதார பிரச்சினைகள் காரணமாகக் கிளர்ந்தெழுந்த மக்கள், 'கோட்டா வெளியேறு' என்று ஆட்சி மாற்றத்தைக் கேட்பதால், இது போன்ற அரசியல் மாற்றங்களில் அர்த்தம் இருப்பதாகத் தெரியலாம். எனினும், இன்று நாடு எதிர்நோக்கி இருக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு இடைக்கால அரசாங்கமோ, காபந்து அரசாங்கமோ 19ஆவது அரசியலமைபபுத் திருத்தமோ உடனடித் தீர்வைத் தரப் போவதில்லை என்பதே யதார்த்தமாகும்.

இவற்றில் எந்த ஆலோசனையை நிறைவேற்றினாலும் நாளாந்தம் உக்கிரமடையும் வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினை காரணமாக உருவாகியுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டையோ உயரும் விலைவாசியையோ சமையல் எரிவாயு தட்டுப்பாட்டையோ கட்டுப்படுத்த முடியாது; மக்கள் அநாதரவாகவே உள்ளனர்.



## வாழ்வியல் தரிசனம்

எல்லோரும் நீண்டகாலம் வாழவேண்டும் என்று விரும்புகின்றனர்; முதிர்ந்தவராக இருக்க விரும்புவதில்லை. என்றும் வாலிபத் தோற்றத்துடன் இருக்க முடியுமா? வயது முதிர்ந்திருந்தாலும் பிரகாசமான அழகுடன் தாத்தா, பாட்டிகளை கண்டிருப்பீர்கள்.

என்றும் சந்தோசமாக இருந்தால், வலிமையுடனும் மலர்ச்சியுடனும் இருக்க முடியும். இளமையும் முதுமையும் யதார்த்தமான மாற்றங்கள். இவற்றை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

மனிதர்களுக்கு பராயம் ஏறஏற, அனுபவங்களும் வந்தபடியே இருக்கும். இதில், விரும்பியதும் விரும்பாததுமான அனுபவங்கள் வந்தபோதிலும், இவை மூலம் கற்பதற்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

இளமையிலேயே உடற்பலம், மனோபலம் ஆகியவை இணைந்தால், முதுமையில் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்கும். இளமைக் காலத்தில் காலங்களை வீணடித்தால், வயது ஏறஏற, சாதனைகளைச் செய்யும் சந்தர்ப்பங்களும் குறைவடையலாம்.

கல்வி, தொழில், அனுபவங்கள் மூலமே, சிறப்பான வாழ்க்கையை உருவாக்க முடியும். போட்டி போட்டு முன்னேறும் உலகம் இது! எவர் போட்டியிட்டாலும் உங்களுக்கு என்ன? நீங்கள் தொடர்ந்து முயன்றால், எல்லாமே கைகூடி வரும். காலங்களை உருவாக்கி முன்னேறுவது உங்கள் பணி.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அண்மையில் புனர்நிர்மாணம் செய்த வீதி மீண்டும் சேதம்

அண்மையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட ஓட்டமாவடி ரயில் கடவை வீதி, மீண்டும் சேதமடைந்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட ஓட்டமாவடி பாலத்தை அண்மித்த ரயில் பாதையை குறுக்கறுத்துச் செல்லும் காபட் வீதி, சேதமடைந்த நிலையில் காணப்பட்டது.

இவ்வாறு சேதமடைந்த நிலையில் காணப்பட்ட வீதியால் பயணிக்கும் நபர்கள், தண்டவாளத்தில் சறுக்கி விழுந்து மரணித்துள்ளதுடன், பலரும் பாதிப்படைந்துள்ளனர்.

நீண்ட காலமாக கவனிப்பாரற்றுக் கிடந்த குறித்த வீதி தொடர்பான செய்திகள், ஊடகங்களில் வெளிவந்ததற்கு அமைய, ஓட்டமாவடி பிரதேச சபை நடவடிக்கை எடுத்து, குறித்த வீதியைப் புனர்நிர்மாணம் செய்தது.

அண்மையில், புனர்நிர்மாணம் செய்யப்பட்ட குறித்த வீதி, மீண்டும் சேதமடைந்து காணப்படுகிறது. இவ் வீதியால் பயணிக்கும் நபர்கள் தொடர்ந்தும் ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து, இவ் வீதியை மீண்டும் சிறந்த முறையில் புனர்நிர்மாணம் செய்து தருமாறு பொதுமக்கள் வேண்டிக் கொள்கின்றனர்.

எச்.எம்.எம். பர்ஸான்




## அமைச்சரவை தீர்மானங்கள் சில

புதிய அமைச்சரவை, ஜனாதிபதி ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் முதன்முறையாக கூடியது. அந்த அமைச்சரவை சந்திப்பின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில...

### நீண்டகால வதிவிட விசா வழங்குதல்

இதற்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நீண்டகால வதிவிட விசா வழங்கும் பொறிமுறைக்குப் பதிலாக புதிய முறைமையொன்றுக்கு, கடந்த வருடம் மார்ச் 07 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டது.

குறித்த பொறிமுறையின் கீழ் குறிப்பிட்ட நீண்டகால வதிவிட விசா வழங்குதல் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

கூட்டு ஆதனங்களின் பெறுமதி குறைந்தபட்சம் 75,000 அமெரிக்க டொலர் அல்லது அதற்கு மேலதிகமாக முதலீடு செய்கின்ற வெளிநாட்டவர்களுக்கு மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளின் இயக்குநர்களுக்கு, அவர்களுடைய துணைவருக்கும் தங்கி வாழ்பவர்களுக்கும் அவ்வாறு முதலிடுகின்ற அமெரிக்க டொலரின் அளவுக்கமைய 5 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான நீண்டகால வதிவிட விசா வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் அங்கிகாரமளிக்கப்பட்ட வணிக வங்கியொன்றில் குறைந்தது 100,000 அமெரிக்க டொலரை வைப்பிலிடும் வெளிநாட்டவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கான வதிவிட விசா வழங்குவதற்கு இயலுமை கிட்டும் வகையில் 'தங்க சுவர்க்க விசா நிகழ்ச்சித்திட்டம்' எனும் பெயரிலான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

### ஆசியாவின் கருத்தியலுக்கான கலாசாரத் தொடர்புகள்

'ஆசியாவின் கருத்தியலுக்கான கலாசாரத் தொடர்புகள்' எனும் தொனிப்பொருளின் கீழ் பாடநெறியொன்றை நடாத்துவதற்காக ஜெனரல் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு ஜப்பானின் யுரேஷியா மன்றம் ஆய்வுக்கான வழங்கலாக 42,000 அமெரிக்க டொலரை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த வழங்கல் மூலம் 200 மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்து அப்பாடநெறியை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### ரஷ்யா, உக்ரேனியர்களின் விசா நீடிப்பு

ரஷ்யா, உக்ரேன் நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளால் இலங்கையில் தங்கியிருக்கும் ரஷ்யா மற்றும் உக்ரேன் நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு கட்டண அறவீடுகளின்றி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுற்றுலா விசா அனுமதியை இரண்டு (02) மாதங்களுக்கு நீடிப்பதற்காக கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கடிகள் இன்னுமே இயல்பு நிலைக்குத் திரும்பாததால், இலங்கையில் தங்கியிருக்கும் ரஷ்யா மற்றும் உக்ரேன் நாட்டவர்கள் எமது நாட்டில் தொடர்ந்து தங்கியிருக்கக் கூடிய வகையில் அவர்களுடைய விசாவுக்கான காலப்பகுதியை நீடிப்பதற்காக சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### மக்களை தெளிவூட்டுவதற்கு யோசனை

தற்போது நாட்டில் உருவாகியுள்ள அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியாகவுள்ள நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் உண்மை நிலைவரங்கள் தொடர்பாக பொதுமக்களைத் தெளிவூட்டுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, அமைச்சுகளின் பங்கேற்புடன் அரசாங்க தகவல் திணைக்களத்தின் மூலம் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

# மேலும் 16 யூடியூப் பக்கங்கள் முடக்கம்

தவறான தகவல்களைப் பரப்பி வரும் யூடியூப் பக்கங்களுக்கு எதிராக இந்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் அண்மைக்காலமாக கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்நிலையில் இந்திய இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டுக்கு எதிராக செயற்பட்டு வரும் மேலும் 16 யூடியூப் பக்கங்களை தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சகம் முடக்கியுள்ளது. இதில் 10 இந்திய யூடியூப் பக்கங்களும் 6 பாகிஸ்தான் யூடியூப் பக்கங்களும் அடங்கும். அத்துடன் இப்பக்கங்களில் உள்ள வீடியோக்களை, 68 கோடிக்கும் அதிகமானோர் பார்வையிட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## சத்குருவை பின்பற்றும் வில் ஸ்மித்



சத்குருவைப் பின்பற்றுவதாக பிரபல ஹொலிவூட் நடிகர் வில் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலஸ் நகரில் அண்மையில் இடம்பெற்ற 94 ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் விழாவில் தொகுப்பாளராக இருந்த நகைச்சுவை நடிகர் கிறிஸ் ரொக், வில் ஸ்மித்தின் மனைவி ஜடா பிங்கெட்டை கேலி செய்ததால் வில் ஸ்மித் ஆத்திரமடைந்து கிறிஸ் ரொக்கின் கன்னத்தில் அறைந்தார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இதனைத் தொடர்ந்து வில் ஸ்மிதிற்கு ஒஸ்காரில் பங்கேற்பதற்கு 10 ஆண்டுகளுக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இத் தொடர் சர்ச்சைகளுக்கு மத்தியில் இந்தியாவுக்கு வருகை தந்துள்ள வில் ஸ்மித் நேற்று முன்தினம் (25) சத்குருவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். மேலும் இது குறித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், தான் சிறிது காலமாக சத்குருவின் வழியை பின்தொடர்வதாகவும், பொருளை மட்டுமே நோக்கி ஓடும் இவ்வுலகில், சத்குரு போல் எதன் மீதும் ஈர்ப்பு இல்லாதவர்களுடன் எனது குடும்பம் தொடர்பில் இருக்க வேண்டும் எனத் தான் விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகம்

## தமிழகத்தில் மீண்டும் ஊரடங்கு?



தமிழகத்தில் அண்மைக் காலமாகக் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இதனால் தமிழகத்தில் முகக்கவசம் அணிவது மீண்டும் கட்டாயமாக்கப்பட்டு உள்ளதோடு, பொது இடங்களில் முகக்கவசம் அணியாதவர்களுக்கு 500 ரூபாய் அபராதமாக விதிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் தீவிரமடைந்து வரும் கொரோனாப் பரவல் காரணமாக ஊரடங்கு அமல்படுத்தப்படும் வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், "தமிழகத்தில் மீண்டும் ஊரடங்கு அமல்படுத்த வாய்ப்பு இல்லை. அத்துடன் `தமிழகத்தில் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த அனைத்து விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே மக்கள் அலட்சியமாக இருக்காமல், தமிழக அரசின் அனைத்து வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டும்.

கொரோனா பரவலை தடுக்க மக்கள் அனைவரும் முகக் கவசம் அணிவதை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

இந்தியா

## 3 ஆவது இடத்தில் இந்தியா

உலக நாடுகளின் இராணுவ செலவு குறித்த ஆய்வு அறிக்கையை ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் அண்மையில் வெளியிட்டது.

அந்தவகையில் குறித்த அறிக்கையில், 2021ஆம் ஆண்டில் உலக நாடுகளின் இராணுவச் செலவு இதுவரை இல்லாத அளவில் 2.1 டிரில்லியன் டொலர்களை எட்டியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 2021ஆம் ஆண்டில் உலகிலேயே அதிக அளவில் இராணுவத்திற்கு செலவு செய்த முதல் 5 நாடுகளாக முறையே அமெரிக்கா, சீனா, இந்தியா, பிரித்தானியா, ரஷ்யா ஆகிய நாடுகள் உள்ளன எனவும், இந்த 5 நாடுகளின் இராணுவ செலவு, உலக நாடுகளின் மொத்த இராணுவ செலவில் 62 % உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் அமெரிக்கா 801 பில்லியன் டொலரையும், சீனா 293 பில்லியன் டொலரையும், இந்தியா 76.6 டொலரையும், பிரித்தானியா 68.4 டொலரையும் ரஷ்யா 65.9 டொலரையும், செலவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கொரோனா தொற்று காரணமாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியிலும், உலக இராணுவச் செலவுகள் 6.1 சதவீதம் அதிகரித்துள்ளதாக அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



பீகார்

## தேசிய கொடிகளை அசைத்து உலக சாதனை



பீகாரின் போஜ்பூர் மாவட்டத்தில் உள்ள ஜக்திஷ்பூர் பகுதியில் கடந்த 23 ஆம் திகதி குன்வர் சிங் மன்னரின் 164ஆவது நினைவு தின நிகழ்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்வின் போது ஒரே நேரத்தில் 78,220 தேசிய கொடிகளை அசைத்து, இந்தியா தனது பெயரை கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்துள்ளது.

மேலும் இந்நிகழ்வின்போது மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உடனிருந்தார் எனவும், இதனை கின்னஸ் உலக சாதனை புத்தகத்தின் பிரதிநிதிகள் நேரில் பார்வையிட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் , லாகூரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் 56,000 பாகிஸ்தானியர்கள் தங்கள் தேசிய கொடியை அசைத்து உலக சாதனை படைத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



வேலூர்

## மாணவர்கள் மேசைகளை உடைத்ததால் பரபரப்பு



வழக்கமான நேரத்தை விட, ஒரு மணி நேரம் முன்பாக பாடசாலை நிறைவடைந்ததால் மாணவர்கள் வகுப்பறையில் உள்ள மேசைகளை உடைத்த சம்பவம் வேலூரில் இடம்பெற்றுள்ளது.

வேலூரில் உள்ள பாடசாலையொன்றில் 12 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலரே இவ்வாறு மேசைகளை உடைத்து அட்டகாசம் புரிந்துள்ளனர்.

சம்பவ தினத்தன்று பாடசாலை ஒருமணி நேரம் முன்னதாக நிறைவடைந்ததால், குறித்த மாணவர்களை வீட்டுக்கு செல்லும்படி ஆசிரியர்கள் அறிவுறுத்தி உள்ளனர். ஆனால் அவர்கள் அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து அட்டகாசம் புரிந்துள்ளனர்.

இதனையடுத்து மாணவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறிய ஆசிரியர்கள், பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்ததாகவும், இதனைத் தொடர்ந்து பொலிஸார் அங்கு வரவே மாணவர்கள் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அட்டகாசம் புரிந்த 10 மாணவர்களை மே மாதம் 4 ஆம் திகதி பாடசாலை நிர்வாகம் இடை நீக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> **சம்பவ தினத்தன்று பாடசாலை ஒருமணி நேரம் முன்னதாக நிறைவடைந்ததால், குறித்த மாணவர்களை வீட்டுக்கு செல்லும்படி ஆசிரியர்கள் அறிவுறுத்தி உள்ளனர். ஆனால் அவர்கள் அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து அட்டகாசம் புரிந்துள்ளனர். இதனையடுத்து மாணவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் ஆசிரியர்கள், பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்**

கரூர்

## தலைக்கவசம் இன்றேல் பெட்ரோல் இல்லை



கரூரில் தலைக்கவசம் அணியாமல் வரும் மோட்டார் சைக்கிள் சாரதிகளுக்குப் பெட்ரோல் வழங்கப்படமாட்டாது என கரூர் மாவட்ட பெட்ரோலிய வணிகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன் நான்கு சக்கர வாகனங்களில் ஆசனப் பட்டி (சீட் பெல்ட் ) அணியாமல் வருபவர்களுக்கும் பெட்ரோல், டீசல் வழங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்ட ஆட்சியர் பிரபுசங்கர் உத்தரவின்படி நேற்றைய தினம் முதல் (26) இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல் சால்வடோர்

# குண்டர்களால் அவசரகால நிலை நீடிப்பு

**அதிகரித்து வரும் குண்டர்களின் அட்டகாசத்தை கட்டுப்படுத்தும் வகையில் அரசாங்கம் தீவிரம்**



எல் சால்வடோர் நாட்டில் அண்மைக் காலமாக குண்டர்களின் அட்டகாசங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி, ஒரே நாளில் 62 பேர் குண்டர்களால் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டில் அதிகரித்து வரும் குண்டர்களின் அட்டகாசத்தை கட்டுப்படுத்தும் வகையில் அந்நாட்டு ஜனாதிபதி நயிப் புகேலே தலைமையிலான அரசாங்கம், தீவிரம் காட்டிவருவதாகவும், இதன் ஒரு பகுதியாக கடந்த மாதம் விதிக்கப்பட்டிருந்த அவசர கால நிலையை நீட்டித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை சுமார் 16,000 க்கும் மேற்பட்ட குண்டர்களை அந்நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்நிலையில் பொது இடங்களில் ஒன்று கூடுதல் மற்றும் தகவல் பரிமாற்றத்தில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் மக்களின் ஜனநாயக உரிமைகளை அரசு பறிப்பதாக ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜப்பான்

## உலகின் விலை உயர்ந்த மாம்பழம்

உலகில் மிகவும் விலை உயர்ந்த மாம்பழங்களாக 'மியாசாகி எனப்படும் ஊதா நிற மாம்பழங்கள் காணப்படுகின்றன.

ஜப்பானில் பயிரிடப்படும் இவ்வகை மாம்பழங்கள், இலங்கை மதிப்பில் ஒரு கிலோ கிராம் சுமார் 12.18 இலட்சம் ரூபாய் என்ற அளவில் விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வகை மாம்பழங்கள் 'தையோ-நோ-டோமாகோ' அல்லது 'எக்ஸ் ஒஃப் சன்ஷைன்' என முத்திரை குத்தப்பட்டு விற்கப்படுகின்றன.

இது மஞ்சள் அல்லது பச்சை நிறத்தில் இல்லாமல், பழுத்தவுடன் ஊதா நிறத்தில் இருந்து அடர் சிவப்பு நிறமாக மாறுவதாகவும், இதன் காரணமாக, இவை டிராகனின் முட்டை என அழைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாம்பழங்கள் 350 கிராம் எடையுடன், 15 சதவீதம் அல்லது அதற்கும் அதிகமான சர்க்கரையையும் கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா

## டுவிட்டரை கைப்பற்றினார் எலான் மஸ்க்; கவலையில் பைடன்




உலகப் பணக்காரர்கள் வரிசையில் முதல் இடத்தில் உள்ளவரும், டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகருமான எலான் மஸ்க், டுவிட்டர் நிறுவனத்தை 44 பில்லியன் டொலருக்கு வாங்க சம்மதம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் டுவிட்டர் தளத்தில் இருந்து தடை செய்யப்பட்ட அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் மீண்டும் சேர்க்கப்படுவார் என தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் கவலையில் உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. 2020ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் முறைகேடான முறையில் ஜோ பைடன் வெற்றிபெற்றதாக ட்ரம்ப் குற்றம்சாட்டிய நிலையில், அவர் தவறான தகவலைப் பரப்புவதாக டுவிட்டர், பேஸ்புக் உள்ளிட்ட நிறுவனங்கள் அவரது கணக்கை நீக்கியிருந்தன.

இந்நிலையில், ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்குவது கருத்து சுதந்திரம் தான் என எலான் மஸ்க் கருத்து தெரிவித்துள்ள நிலையில், ட்ரம்ப் மீதான தடையை எலான் மஸ்க் நீக்குவார் என வெள்ளை மாளிகை வட்டாரம் கருதுவதாகக் கூறப்படுகிறது.

மேலும் இதன் எதிரொலியாக 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டுவிட்டர் தளத்தின் தாக்கம் அதிகமாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.







அமெரிக்கா

## பின்லேடனின் இரகசிய திட்டம் வெளியானது

**பின்லேடன் சார்ந்த தனிப்பட்ட கடிதங்கள், குறிப்புகளில் இருந்து தெரியவந்தது**

அமெரிக்காவில் இரட்டை கோபுர தாக்குதலுக்குப் பின்னர் 2ஆவது தாக்குதல் ஒன்றையும் நடத்த ஓசாமா பின்லேடன் திட்டமிட்டிருந்ததாக வெளியான தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி பயணிகள் விமானங்களைக் கடத்திய அல்-கைய்தா பயங்கரவாதிகள், அவற்றை நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையமான இரட்டை கோபுரத்தின் மீதும், வோஷிங்டனில் உள்ள அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் மீதும் மோதி தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலில் 3,000 பேர் வரை கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து இத்தாக்குதல்களுக்குக் காரணமான அல்-கைய்தா பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஓசாமா பின்லேடனை, 10 ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்க படையினர் பாகிஸ்தானில் வைத்து சுட்டுக் கொன்றனர்.

இந்நிலையில், இரட்டை கோபுர தாக்குதலுக்கு பின்னர் 2ஆவது தாக்குதல் ஒன்றையும் நடத்த ஓசாமா பின்லேடன் திட்டமிட்டிருந்ததாக இரகசியத் தகவல் ஒன்று கசிந்துள்ளது.


பின்லேடனை கொன்ற பின்னர், அவர் சார்ந்த தனிப்பட்ட கடிதங்கள், குறிப்புகளை கைப்பற்றி வைத்திருந்த அமெரிக்கப் படை, அக்கடிதங்களில் ஒன்றில், 9/11 தாக்குதலை மீண்டும் நடத்த பின்லேடன் ஆர்வம் காட்டியிருந்தார் எனவும், ஆனால், அக்கால கட்டத்தில் விமான நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததால், பயணிகள் விமானத்திற்கு பதிலாக சார்ட்டர் விமானம் ஒன்றைக் கொண்டு அமெரிக்கா மீது அடுத்த தாக்குதலை நடத்தலாம் என சர்வதேச பயங்கரவாத குழுவொன்றுக்கு பின்லேடன் தெரிவித்திருந்தார் எனவும் கூறப்படுகின்றது.


மேலும், விமானம் வழியே தாக்குதல் நடத்துவது கடினமாக இருந்தால் அமெரிக்க ரெயில்வே மீது குறிவைக்க அவர் திட்டமிட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## ஒருநாள் மேயராக மாறிய பூனை

**100 டொலர் பணம் செலுத்தி, ஹெல் நகரின் மேயராக யார் வேண்டுமென்றாலும் பதவி வகிக்கலாம்**





அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் உள்ள ஹெல் நகரில் பூனையொன்று ஒருநாள் மேயராக மாறிய சம்பவம் மக்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெரிய கண்களைக் கொண்ட ஜின்க்ஸ் என்ற பூனையே இவ்வாறு ஹெல் நகரத்தின் மேயராக பதவிவகித்துள்ளது.

இப்பூனைக்குட்டிக்கு டிக்டொக்கில் 735,000க்கும் அதிகமான பின்தொடர்பவர்களும், இன்ஸ்டாகிராமில் 400,000க்கும் அதிகமான பின்தொடர்பவர்களும் உள்ளனர்.

இந்நிலையில், அண்மையில் 100 டொலர் பணம் செலுத்தி, ஹெல் நகரின் மேயராக யார் வேண்டுமென்றாலும் பதவி வகிக்கலாம் என அந்நகர நிர்வாகம் அனுமதி அளித்திருந்தது.

இதையடுத்து அப்பூனையின் உரிமையாளர் மியா, 100 டொலர் செலுத்தி ஜிங்சை ஒருநாள் மேயராக்கியுள்ளார்.

இந்நிலையில், சுமார் 72 பேர் மாத்திரமே வசிக்கும் ஹெல் நகரின் ஒரு நாள் மேயராக ஜின்க்ஸ் பதவி வகித்துள்ள சம்பவம் இணையத்தில் வைரலாகி வருகின்றது.

ஐ.பி.எல்:

# சென்னையை வென்ற பஞ்சாப்



இந்தியன் பிறீமியர் லீக்கில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸுடனான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற சென்னையின் அணித்தலைவர் இரவீந்திர ஜடேஜா, பஞ்சாப்பை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.


அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், ஷீகர் தவானின் ஆட்டமிழக்காத 88 (59), பானுக ராஜபக்‌ஷவின் 42 (32), லியாம் லிவிங்ஸ்டோனின் 19 (07) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மகேஷ் தீக்‌ஷன 4-0-32-1, மிற்செல் சான்ட்னெர் 2-0-8-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 188 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென்னை, அம்பாதி ராயுடுவின் 78 (39) ஓட்டங்கள் மூலம் போராடியபோதும் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்று 11 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், ககிஸோ றபாடா 4-0-23-2, அர்ஷ்டீப் சிங் 4-0-23-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக ஷீகர் தவான் தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத்தை குஜராத் டைட்டான்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

## ஜுவென்டஸ் செல்லும் டி மரியா?



பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான ஏஞ்சல் டி மரியாவை இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் கைச்சாத்திடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

34 வயதான டி மரியாவின் ஒப்பந்தத்தை நீடிக்காமலிருக்க பரிஸ் ஸா ஜெர்மைன் தீர்மானித்ததையடுத்தே இத்தகவல் வெளியாகியுள்ளது.

## ஓய்வு பெறவுள்ள செலினி



இங்கிலாந்தின் வெம்ப்ளியில் எதிர்வரும் ஜீன் மாதம் நடைபெறவுள்ள ஆர்ஜென்டீனாவுடனான சிநேகபூர்வ போட்டியைத் தொடர்ந்து சர்வதேச கால்பந்தாட்டத்திலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக இத்தாலியின் பின்களவீரரான ஜோர்ஜியோ செலினி தெரிவித்துள்ளார்.

கடந்த 2004ஆம் ஆண்டு அறிமுகத்தை மேற்கொண்ட 37 வயதான செலினி 116 போட்டிகளில் விளையாடியுள்ளார். கடந்தாண்டு யூரோவை வென்ற அணியில் முக்கிய நபராகக் காணப்பட்ட செலினி, இவ்வாண்டு உலகக் கிண்ணத்துக்குத் தகுதி பெறத் தவறிய அணியிலும் இடம்பெற்றிருந்தார்.

இந்நிலையில், நடப்புப் பருவகாலத்தைத் தாண்டி தனது கழக விளையாடும் காலத்தை நீடிப்பதா என தீர்மானிக்கவில்லை என இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸைப் பிரதிநிதித்துவப்படுத்தும் செலினி தெரிவித்துள்ளார்.

## யுனைட்டெட் செல்லும் டி ஜொங்க்?



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் மத்தியகளவீரரான பிரெங்கி டி ஜொங்கைக் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் ஆர்வமாயுள்ள நிலையில், 70 மில்லியன் யூரோத் தொகைக்கு டி ஜொங்கை வெளியேற பார்சிலோனா அனுமதிக்கலாமெனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், டி ஜொங்குக்குப் பதிலாக தமது முன்களவீரர் மார்க்கஸ் றஷ்ஃபோர்ட்டையும், பின்களவீரர் அலெக்ஸ் டெலெஸையும் யுனைட்டெட் அளிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட்:

## சம்பியனான பிளாஸ்டர்

■ நூருல் ஹுதா உமர், அஸ்ஹர் இப்றாஹீம்

சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்தை வென்றே நான்காவது தடவையாக பிளாஸ்டர் சம்பியனானது.

இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகம் ஐந்து ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 55 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம் 4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கட்டுகளால் வென்றது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 27 ஏப்ரல் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.